Registered No. M-4483 Madras War Review (TAMIL) 3-3-1944

யுத்த சஞ்சிகை

மலர் IV 1944-ம் ஞு மார்ச்சுமீ 3வ, வெள்ளிக்கிழமை இதழ் 26

நான் உங்களைப் போற்றுகிறேன்

14-வது தரைப் படையும் கிழக்கு விமானப் படையும் ஏற்பட்ட பிறகு நடை பெற்ற முதல் போராட்டத்தில், வெற்றி பெற்று விட்டீர்கள். ஜப்பானியர்களைப் பிளந்து விட்டீர்கள். அதை அவர்கள் ஒரு போதும் மறக்க மாட்டார்கள். திடீ ரென்று துரோகத் தனமாய் விழுந்து தாக் குவதனால் யுத்தங்களில் வெற்றி யடைய முடியாதது போலவே, திடீரென்று தாக் குவதனால் போராட்டங்களும் முடிவடைய மாட்டா. மூன்று வாரங்களுக்கு முன்பு ஒரு பெரிய பலமான படையைக் காடுகளின் வழியாக எதிரிகள் அனுப்பினார்கள். உங்க ளுடைய போக்கு வரவுப் பாதைகளை வெட்டி விட்டு, பின்புரம் வந்து தாக்க வேண்டு மென்பது தான், அவர்களுக்குக் கிடைத் திருந்த கட்டளை. அரக்கானில் மிகக் கடுமை யாகத் தாக்கினார்கள். உங்களை வென்று இந்தியாவையே ஒரு வீச்சு வீசலா மென்று தான் அவர்கள் எண்ணி யிருந்தார்கள். இந்தத் தாக்குதலை, வீரத்தோடும், பலத் தோடும் மன உறுதியோடும் தடுத்து நின் றீர்கள். உங்களில் பலர் மற்றவர்களி னின்று துண்டிக்கப்பட்டீர்கள்; வளைந்து கொள்ளப் பட்டீர்கள். விமானங்களி லிருந்து எறியப்படும் சப்ளைகளைக் கொண்டே உயிர்வாழ வேண்டிய நிலைமையி லிருந்தீர் கள். என்றாலும் நீங்கள் ஒவ்வொருவரும் உறு தியோடும் ஊக்கத் தோடும் இருந்தீர்கள். அடுத்தாற் போல், பலமான தரைப் படை, கடற் படை, விமானப் படை உதவி உங்க ளுக்குக் கிடைக்கும் என்று தெரிந்து கொண் டிருந்தி கள்.

லார்ட் லூயி மௌண்ட் பேட்டன்.

காடுகளிலும் ஆகாயத்திலும் கடுமையா கப் போராடிய பிறகு, ஜப்பானியத் தாக்கு தல்கள் தவிடு பொடியாகி விட்டன. உங்க ளுக்குப் பின்புரமாக வந்து நுழைந்து கொண்டிருந்தவர்கள் அழிக்கப்பட்டார்கள்; அல்லது சிதறடிக்கப் பட்டார்கள். அச்சத்திற்கு இடமாய் இருந்த கணவாய்களிலும் ரோடுகளிலும், இப்போது தாராளமாகப் போகலாம். நீங்கள் பூரண வெற்றி பெற்று விட்டீர்கள்.

நான் சமீபத்தில் உங்களைக் கண்டபோது, உங்களுடைய சிறந்த உணர்ச்சியை நான் தெளிவாகக் கண்டேன். அந்த உணர்ச்சியையும், பிடிவாதத் தன்மையையும், வீரத்தையும் எதிரியும் உலகும் உணர்ந்து கொள்ளும் படி செய்து விட்டீர்கள். உங்களை நான் போற்றுகிறேன்

லார்ட் லூயி மௌண்ட்பேட்டன், தென் கிழக்காசியப் படையின் ம்கா தலைவர், பிப்ரவரி மாதம் 28-ம் தேதி 14-வது தரைப் படைக்கு விடுத்த செய்தி.

பொருளடக்கம்.

	பக்கம்.
முகப்புப் படம் : லார்ட் லூயி மௌண்ட் பாட்டன்.	1
"நான் உங்களைப் போற்றுகிறேன்"	1
முரசொலி	2
தலையங்கம் : இந்தியப் படைகளின் வீரச் செயல்கள்	3
சென்னைக்கு மற்று மொரு சிறப்பு	4
போர் முனை நிகழ்ச்சி விளக்கம்	4
வானொலி நாட் குறிப்புக்கள்	5
அக்கிரம சேமிப்பும் அநியாய லாபமும் ..	6
அச்சுப் பிரசார ஆராய்ச்சி	7
யுத்த காலத்தில் அரசாங்க உதவி	8
படங்கள் : கப்பற் படையிற் சேர்ந்து உயர் வாழ்வடையுங்கள்	9
இந்தியக் கப்பற் படையின் பழம் பெருமை ..	10
அங்கும், இங்கும்	11
இங்கிலாந்திலிருந்து திரும்பிய இந்தியப் படைகள்.	12
சென்னைப் படையில் பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்.	13
வாசக வட்டாரங்கள்	14
மத்திய ஐரோப்பாவில் எதிர்ப்புத் தீ	15
யுத்த நாட் குறிப்புக்கள்	16

மு ர சொ லி

"நாம் நெடுந் தூரம் கஷ்டப்பட்டுச் செல்ல வேண்டும்; என்றாலும், இதுவரை கடவுள் அருள் நமக்குத் துணை யிருந்து நடத்தி வந்ததைப் போலவே, இனியும் நடத்தும். கடைசியாக வெற்றிப் புகழடைவோம்."

—ஜெனரல் டக்ளஸ் மெக்கார்தர்,
நியூகினியில் பிப்ரவரி மாதம் 26-ம் தேதி கூறியது.

* * * * * *

"ஐரோப்பாவை மீட்பதற்காக நடை பெறப் போகும் போராட்டத்தில் தரைப் படையுடனும் கடற் படையுடனும் சேர்ந்து தன் கடமையைச் செய்ய பிரிட்டிஷ் விமானப் படை ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது. நம் நிலைமையை யெல்லாம் உறுதிப் படுத்திக் கொண்டோம். யுத்தத்தின் உச்ச நிலையை நாம் அணுகிக் கொண்டிருக்கிறோம் போலும். இந்தச் சமயத்தில் நம்மாலான எல்லா வகைகளிலும் முயற்சிக்க வேண்டும்."

—சர் ஆர்ச்சிபால்ட் சிங்க்ளேர்.
பிரிட்டிஷ் விமான மந்திரி காமன்ஸ் சபையில் பிப்ரவரி மாதம் 29-ம் தேதி கூறியது.

* * * * * *

"மற்ற எல்லா நாடுகளிலுமுள்ள போர்க் கப்பல்களின் மொத்தத் தொகைக்கு ஈடாக, 1944-ம் வருஷக் கடைசியில் அமெரிக்காவின் போர்க் கப்பல்களின் எண்ணிக்கை யிருக்கும்."

—ரியர் அட்மிரல் எல். காக்ரெய்ன்,
அமெரிக்க கப்பல் ப்யூரோவைச் சேர்ந்தவர், பிப்ரவரி மாதம் 28-ம் தேதி கூறியது.

* * * * * *

"எந்தச் சமயமும் நாமும் யுத்தத்திற்கு ஆளாக நேரலாம். நமது உரிமைகளையும் சுயேச்சையையும் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு நம் உயிரையுங் கொடுக்கும்படி நேரலாம். நடு நிலைமைக் கொள்கை, ஒரு கட்சியார் மட்டும் தமக்கென அனுமதித்துள்ள கொள்கை யல்ல. மக்கள் அனைவரும், ஒவ்வொரு கட்சியினரும் ஒவ்வொரு ஸ்தாபனமும் மேற் கொண்டிருக்கும் கொள்கை இது தான்.

—டி வாலெரா,
அயர்லந்து முதல் மந்திரி, பிப்ரவரி மாதம் 28-ம் தேதி கூறியது.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV | 1944-ம் ௵ மார்ச்சு ௴ 3௳, வெள்ளிக்கிழமை | இதழ் 26

இந்தியப் படைகளின் வீரச் செயல்கள்

பர்மாவிலுள்ள அரக்கானிலும், இத்தாலியிலுள்ள அன்சியோ கடற்கரைப் போர் முனையிலும் நேச நாட்டுப் படை.கள் கடுமையாகப் போராடிக் கொண்டிருக்கின்றன. கடுமையான போராட்டத்திற்குக் காரணம், எதிரிகளின் எதிர்ப்பு பலந்தான் என்பது சொல்லாமலே விளங்கும். நிற்க இயற்கையும் எதிரிகளுக்குத் துணை செய்கிறது. கடுமையான மழை. காடுகளடர்ந்த மலை. மலேரியா காய்ச்சல். இவை எல்லாம் நம் படைகளுக்குப் பாதகமாகவும், எதிரிகளுக்குச் சாதகமாகவும் இருக்கின்றன. இவ்வளவு கஷ்டங்களையும் சகித்துக் கொண்டு தான், இத்தாலியில், 5-ம் படையும் 8-ம் படையும் கொஞ்சங் கொஞ்சமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றன. இது பற்றி சில அவசரக் குடுக்கைகள் அதிருப்தி கொள்ளுகின்றன. இது போலவே தான் அரக்கான் போர் முனையிலும். சென்ற மூன்று வாரங்களாக ஜப்பானியர்களின் கடுமையான எதிர்ப்பை 7-வது இந்திய டிவிஷன் படை சமாளித்துக் கொண்டு வந்தது. அது மட்டுமா? தம்மை முற்றுகை யிட்டுக் கொண்டிருந்த எதிரிகளுக்கும் பலமான சேதத்தை விளைத்தது. இதை ஒரு பெரும் வெற்றி என்று சொல்லலாம். இந்தப் படைக்குப் பதிலாக 14-வது படையின் 8-வது டிவிஷன் அந்த ஸ்தானத்தை ஏற்றுக் கொண்டது. 'பதறாத காரியம் சிதறாது' என்பது ஆன்றோர் வாக்கு. தன் வலிமையையும் மாற்றான் வலிமையையும் சீர் தூக்கிப் பார்த்து, இடம் பொருள் ஏவல் இம்மூன்றையும் அனுசரித்துப் போராடுதல் தான், முறை. இந்த முறையை கிழக்காசியப் படைத் தலைவர் சிறந்த முறையில் கையாளுகிறார் என்பது கண்கூடு. "வினையுடையான் வந்தடைந்து வெய்துறும் போழ்தும் மனனஞ்சா னாகலினிது" என்னும் உயர்ந்த தத்துவத்தை உணர்ந்து, எத்தனை வகைக் கஷ்டங்கள் நேர்ந்தாலும், அவற்றைச் சமாளித்துக் கொண்டு, மேலும் மேலும் எதிரிகளோடு மகா வீரத்தோடு போராடுகின்றனர் நம் படையினர். இத்தாலியிலோ மலைகளில் உற்பத்தியாகும் ஆறுகள் அதி வேகமாகப் பாய்கின்றன. கடு மழை பெய்வதால் ஆறுகளில் வெள்ளமும் வெகு அதிகம். இப்படிப் பட்ட பெரு வெள்ளத்தைக் கடந்து போவதும் மகா கஷ்டம். இந்தக் கஷ்டத்தையும், அதனால் ஏற்படக் கூடிய நஷ்டத்தையும் பொருட் படுத்தாமல், நம் இந்தியப் படைகள், மெய் வருத்தம் பாராது, பசியைப் பொருட் படுத்தாது, ஊண் உறக்க மில்லாது கடந்து போய்ப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். மன உறுதி வெற்றி தர வல்லது. இந்த உண்மையை அவர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள் போலும். கொஞ்சமும் மனத் தளர்ச்சி யடையாது போராடிக் கொண்டிருக்கிறார்கள். அரக்கானில் போராடிக் கொண்டிருக்கும் இந்தியப் படைகள் மட்டும் அவர்களுக்கு இளைத்தவர்களா என்ன? இல்லவே யில்லை. எல்லாம் ஒரு குலைக் காய் தானே. மாயூ மலைப் பிரதேசமும் இத்தாலியப் பிரதேசத்தைப் போலவே தான். மாயூ ஆறு மாயூ மலையில் உற்பத்தியாகி, பல மாயூ பள்ளத்தாக்குகள் வழியாகப் பாய்ந்து வங்காளக் குடாக்கடலில் சங்கமமாகிறது. ஆகவே, மலைகளூடேயே இது பாய்கின்றபடியால், இதன் வேகம் வெகு அதிகம். இதைக் கடப்பதும் எளிதான காரியமல்ல. மேலும் மாயூ மலையில் பதுங்கி யிருந்து தாக்குவதற்குப் பல புதர்களும் மறைவிடங்களுமுண்டு. இவற்றில் ஜப்பானியப் படைகள் முதலில் பதுங்கி யிருந்து கொண்டு தான், போராடிக் கொண்டிருந்தார்கள். தாம் கைப்பற்றிய இடங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டுத் தான் இந்த முறையை அவர்கள் கையாண்டார்கள். பிறகு பெரியதோர் படையுடன் நேச நாட்டுப் படைகளைத் தாக்கினார்கள். ஆனால், அஞ்சா நெஞ்சமும் ஆண்மையும் கொண்ட நேச நாட்டுப் படைகள் கொஞ்சமும் விட்டுக் கொடுக்கவில்லை. கற் கோட்டைகள் எனத் தக்கபடி தம் பாசறைகளை அமைத்துக் கொண்டு எதிர்த்தனர். ஜப்பானியர்களும் கைக்காரர்களல்லவா? நேச நாட்டுப் படைகளின் போக்கு வரவுப் பாதைகளை வெட்டி விட்டார்கள். ஆனால் உடனுக்குடன் நேச நாட்டுப் படைகள் அவற்றைச் செப்பனிட்டு, மேலும் பழுதாக்க முடியாதபடி தடுத்து விட்டனர். அது மட்டுமா? ஜப்பானியர்களை எதிர்த்துத் தாக்கினர். முன்னேறினர். ஜப்பானியர்களில் 1,500 பேர்கள் மாண்டனர். சுமார் 3,000 பேர்கள் காயப்பட்டிருப்பார்களென்று தெரிகிறது. அன்றியும் அவர்கள் பதுங்கியிருந்த பகுதிகளில் மலேரியா காய்ச்சல் முதலிய கடு நோய்களுக்கு இலக்கானவர்கள் பலர். இவை யெல்லாவற்றையும் சீர் தூக்கிப் பார்த்தால், ஜப்பானியர்களுக்கு அரக்கான் போராட்டத்தில் கடுமையான சேதம் ஏற்பட்டிருக்க வேண்டுமென்பது தெளிவாகிறது.

இங்கே மற்றொரு விஷயம் கவனிக்கத் தக்கது. யுத்த ஆரம்பத்தில் ஜெர்மன் படைகள் ஐரோப்பா முழுவதையுமே நடுங்கச் செய்தன. பல நாடுகளை வெகு எளிதில் கைப்பற்றின. சரணாகதியடைந்த நாடுகளும் உண்டு. அந்நாடுகளில் கிடைத்த ஆள் பலத்தையும் பொருள் பலத்தையுங் கொண்டு, உலகையே வென்றுவிடலாமென்று மனப்பால் குடித்தார் ஹிட்லர். அதே போலத்தான் ஜப்பானியரும். தாம் தாக்க ஆரம்பித்தவுடனே வெகு விரைவில் பசிபிக் மகா சமுத்திரத்

திலிருந்து பல தீவுகளைக் கைப்பற்றினர். தாய்லந்து, மலேயா, பர்மா முதலிய நாடுகளையும் கைப்பற்றினர்கள். இவர்கள் வெற்றி மேல் வெற்றி பெற்று வந்தார்கள். உலகத்தையே வென்று கட்டியாள வேண்டு மென்பது தானே ஜப்பானியர்களுடைய எண்ணமும். ஜப்பானியருடைய எண்ணமும் ஜெர்மானியருடைய நோக்கமும் ஒன்று தான் என்பது இதினின்று வெளியாகிறது. "தன்னைப் போல் பிறனையும் நேசி" என்று கிருஸ்து பிரான் கூறிய திருவாக்கை ஜெர்மானியர்கள் பொருட்படுத்தி யிருந்தால், ஒருக்கால் அன்பினல் உலகையே கட்டுப்படுத்தி அவர்களுடைய உள்ளங்களை வென்றிருக்கக் கூடும். அப்படிச் செய்தார்களா ஜெர்மானியர்கள்? இல்லை. கொடுமையைத் தம் ஆயுதமாகக் கொண்டார்கள். அதன் பலனுகத் தாம் அடைந்த பலன், வெறுப்புத்தான். இதே போலத்தான் ஜப்பானியர்களும். தாம் கைப்பற்றிய நாடுகளில் ஆள் பலமும் விளை பொருட்களும் ஏராளமாயுண்டு. இவற்றைத் துணைக் கொண்டு உலகத்தையே வெல்ல எண்ணினர்கள். 'அஹிம்சா பரமோ தர்ம' என்னும் சீரிய மொழி புகன்ற புத்த பிரானின் மதத்தைச் சார்ந்த ஜப்பானியர்கள், இந்தச் சிறந்த மொழியை அலட்சியஞ் செய்து 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று நடக்கத் தொடங்கினர். கிழக்காசிய நாடுகளின் பாதுகாவலர் எனத் தாமே பெயர் புனைந்து கொண்டு, தாம் கைப்பற்றிய நாடுகளையெல்லாம் சூறையாடுகின்றனர். ஆகவே அந்நாட்டவரும் அவர்கள் மீது வெறுப்புக் கொள்ளத் தான் செய்வார்கள். ஜெர்மானியர்களுக்கோ கிழக்கே ரஷ்யாவால் ஆபத்து. தெற்கே நேச நாடுகளால் ஆபத்து. மேற்கே இரண்டாம் போர் முனையும் ஆரம்பமாகிக் கொண்டிருக்கிறது. அன்றியும் தாம் கைப்பற்றிய நாடுகளைக் காப்பாற்றிக் கொள்ள முடியாமல் ஒவ்வொன்றுக இழந்து கொண்டு வருகிறார்கள். அது போலவே தான் ஜப்பானியர்களுக்கும். வடக்கே அலூஷியத் தீவுகளிலிருந்து ஆபத்து. தெற்கே ஜப்பானியர் கைப்பற்றிய முக்கிய ஸ்தானங்களை யெல்லாம் ஒவ்வொன்றுக இழந்து கொண்டிருக்கிறார்கள். சீனவிலும் ஜப்பானியர்களுக்குத் தோல்வி. இத்தனைப் போர் முனைகளிலும் போராடிக் கொண்டிருக்க வேண்டி யிருக்கிறது ஜப்பானியர்களுக்கு. ஆழந் தெரியாமல் காலை விட்டுக் கொண்டு அவதிப்படுகிறார்கள் ஜப்பானியர்கள். இந்த நிலைமையில் அரக்கான் போர் முனையிலும் இந்தியப் படைகளிடம் தோல்வியடைகிறார்கள். இந்தத் தோல்வியின் பயனுக, மாயூ மலையின் சிகரமான ஒரு கேந்திர ஸ்தானம் நேச நாட்டுப் படைகள் வசம் சிக்கிவிட்டது. அதைத் தம் பாசறையாக அமைத்துக் கொண்டு மேலும் முன்னேறிக் கொண்டிருக்கின்றன நேச நாட்டுப் படைகள்.

இத்தாலியிலும் அரக்கானிலும் இந்தியப் படை வீரர்களின் அரும் வீரச் செயல்களைப் பாராட்டி மேன்மை தங்கிய கிழக்காசிய படைத் தலைவர் பெரிதும் புகழ்ந்திருக்கிறார். இப்புகழ்ச்சிக்கு என்றும் உரியவர்களாக இந்தியப் படையினரும் இந்திய பொது மக்களும் வாழ்வார்களாக!

சென்னைக்கு மற்று மொரு சிறப்பு

சென்னைக்கு சிறப்புக்கு மேல் சிறப்பு அடுக்கடுக்காகக் கிடைக்கிறது. இது பற்றி, அது சளைத்ததாகத் தெரியவில்லை! இதோ கடைசியாகக் கிடைத்த சிறப்பு! விசாகப்பட்டினம் ஜில்லாவிலுள்ள ஒரு கிராமத்தில் ஆண்களின் மொத்த எண்ணிக்கை 508. இவர்களில் 256 பேர்கள் இராணுவங்களில் சேர்ந்திருக்கிறார்கள். அந்தக் கிராமத்திலுள்ள ஆண்களில் 100-க்கு 95 பேர்கள் போர்முனையில் சேவகம் செய்கிறவர்கள்; அல்லது சேவகம் செய்தவர்கள்! இது ஒரு சிறப்பல்லவா? இது ஒரு தனிப்பெருஞ் சிறப்பென்று சொல்லவும் வேண்டுமா?

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

பிரிட்டிஷ் பிரதம மந்திரியின் மகன் காப்டன் ரண்டால்ப் சர்ச்சில் யூகோஸ்லாவியா போய்ச் சேர்ந்திருக்கிறார் என்ற செய்தி வெளியாகி யிருக்கிறது. இது ஐரோப்பிய போர்க் களக் காட்சியை நமக்கு ஞாபகப்படுத்துகிறது. இந்தப் போராட்டத்தைப் பற்றிய செய்திகள் அடிக்கடி வெளியாவதில்லை. சென்ற முறை யுத்த நிலைமையைக் குறித்து மிஸ்டர் சர்ச்சில் விமரிசம் செய்த போது, பொதுவாக பால்கன் நாடுகளைக் குறித்தும் குறிப்பாக, யுகோஸ்லாவியாவைக் குறித்தும் வெகு விரிவாகக் குறிப்பிட்டார். மகத்தான முறையில் தன் நாட்டை விடுவிக்க வேண்டிப் போராடும் கட்சித் தலைவரான மார்ஷல் டைட்டோவை வெகுவாகப் புகழ்ந்தார். அவர் மேலும் கூறியதாவது:—

"நெடு நாட்களாகவே மார்ஷல் டைட்டோவின் இயக்கத்தில் பெரிதும் அக்கரை கொண்டிருந்திருக்கிறேன். எல்லா வகைகளிலும் உதவி செய்யவும் முயன்று கொண்டிருந் திருக்கிறேன்..................மார்ஷல் டைட்டோவையும் அவருடைய வீரப் படையினரையும் நிலை நிறுத்த உதவ வேண்டி, நம்மால் இயன்ற வரை எல்லா வகைகளிலும் உதவி செய்யப் படுமென்று இந்தச் சபையோருக்கு உறுதி கூறுகிறேன்.........எந்தெந்தத் துறைகளி லிருந்து உதவி பெறக் கூடுமோ அங்கிருந் தெல்லாம் அவருக்கு உதவி தேடித் தரவேண்டு மென்பது தான் நமது எண்ணம். இதனுல், நாம் பிறருக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை நிறைவேற்றுவதில் தவற மாட்டோம்.......... நல்லெண்ணத் தோடேயே இருக்க வேண்டும். அரசியல் சாதக பாதகங்களால் விருப்பு வெறுப்பில்லாமல், நாஜி ஆட்சியை எதிர்த்து விடுதலைப் போராட்டத்தை நடத்தி, எதிரியை மகா கடுமையாகச் சேதப்படுத்துகிறவர்களுக்கு உதவி செய்ய முயற்சிப்பது என்னும் கொள்கையை இங்கேயும் எங்கேயும் பின் பற்றுவது தான் எமது ஆசை"

சுமார் ஒரு வருஷத்திற்கு முன்பு ஒரு இராணுவ மிஷன் அங்கே அனுப்பப்பட்டது என்பதை இங்கே ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுவது பொருத்த மாகும். அதன் தலைவர் அப்போது காப்டனுக விருந்து இப்போது லெப்டினென்ட் கானலாக இருக்கும் டீக்கின். சமீபத்தில்

கா..ன் ரண்டால்ப் சர்ச்சில் யூகோஸ்லாவியா போய்ச் சேர்ந்தது போலவே, அவரும் விமானக் குடை வழியாகத் தான் அங்கே போய்ச்சேர்ந்தார். அவர் மார்ஷல் டைட்டோவின் தலைமை ஸ்தானத்தில் 8 மாத கால மிருந்தார். சென்ற ஜூலை யுதிர் காலத்தில் மற்றொரு பெரிய கோஷ்டி கிளம்பியது. இதன் தலைவர் பிரிகேடியர் பிட்ஸ்ராய் எச். மக்லீன் இவர் லங்காஷையர் பகுதியின் பிரதிநிதியாக பார்லிமெண்ட் அங்கத்தினரா யிருந்தவர். மிஸ்டர் சர்ச்சில் கெய்ரோவி லிருந்த போது, இந்த பிரிகேடியர் அங்கு சென்று அவரைக் கண்டார். யூகோஸ்லாவிய நிலைமையைக் குறித்து அறிவித்தார். இப்போது மீண்டும் அந் நாட்டிற்கு விமானக் குடை மூலமாகத் திரும்பிப் போய் விட்டார். கெய்ரோவில், மிஸ்டர் சர்ச்சிலிடத்தில், டைட்டோவின் படைகளின் வீரமும் பலமும் நாளுக்கு நாள் ஓங்கிக் கொண்டு வருவது பற்றி, அறிவித் திருக்கக் கூடும். யூகோஸ்லாவியாவின் அரசியல் சிக்கல்களும், இன வேற்றுமைகளும் அதை எந்த அளவிற்கு நாசப் படுத்தியிருக்கின்றன வென்றும், மக்களுக்குள் ஒற்றுமை யில்லாத காரணத்தினால், நாடு எவ்வளவு மகத்தான தொல்லைகளுக்கு ஆளாக நேர்ந்த தென்றும், நாஜிக் கொடுங் கோலர்களை எதிர்த்து நின்று எவ்வளவு கடுமையாகப் போராட நேர்ந்த தென்றும், இப்போது ஆலோசிக்கப் படவேண்டும். சென்ற மகா யுத்தத் தீப் பிழம்பில் தோன்றியது தான், புதிய யூகோஸ்லாவ் நாடு. இந் நாட்டில் 'ராடிகல்' கட்சி யென்று பெயர் கொண்ட ஒரு கட்சி ஆதிக்கம் பெற்றிருந்தது. 'ராடிகல்' என்னும் பதத்திற்கு 'தீவிரமான' என்று பொருள். இவர்கள் பெயரளவிலே தான் தீவிர வாதிகளா யிருந்தார்களே யொழிய, உண்மையிலேயே வைதீகக் கோஷ்டியாராகத் தான் இருந்தார்கள். இந்தக் கட்சிக்கு மிகுந்த செல்வாக்கிருந்தது. தேசிய மீட்சிக்காக நடை பெற்ற எல்லா யுத்தங்களிலும், இந்தக் கட்சி பெரும் பங்கு கொண்டது. யூகோஸ்லாவ் நாட்டில் பல மானதோர் அரசாங்கம் அமைய வேண்டுமானால், ஒழுங்கு முறைப் பழக்கமும் மத்திய ஆதிக்கமும் மிகவும் அவசியம் என்று இந்தக் கட்சி கருதியது இந்த உறுதியான எண்ணந் தான் யூகோஸ்லாவ் அரசாங்கத்திலும் மேவியிருந்தது. இதன் பயனாக சில தொல்லைகள் எற்பட்டன. செர்பியர்கள் தம்மைக் கொடுமைப் படுத்துவதற்கு, மத்திய நிர்வாகந் தான் காரணம என்று க்ரோஷியாக் காரர்கள் கருதினார்கள் என்று தெரிகிறது. ஆகவே, தமக் கென்று தனி நாடாகப் பிரிந்து விடவேண்டு மென்று க்ரோஷியாக்காரர்கள் கோரினார்கள். 1921-ம் வருஷம் பெல்கிரேட் நகரத்தில், முதலாவது யூகோஸ்லாவ் அரசியல் சபை கூடியது. அந்தக் கூட்டத்திற்குக் க்ரோஷியாக் காரர்கள் வர மறுத்து விட்டனர். இவர்களுக்குள்ளிருந்த மனக் கசப்பைத் தமக்குச் சாதகமாக ஜெர்மானியர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள். செர்பியாக் காரர்களுக்கு விரோதமாக க்ரோஷியத் தலைவரான ஆண்டி பாவிலிச் என்பவரை உபயோகப்படுத்தினார்கள். இவர் ஹிம்லரின் உத்திரவுப்படி க்ரோஷியாவில் வசித்து வந்த செர்பியர்களை யெல்லாம் பெருவாரியாகக் கொன்று குவித்தார். இது செர்பியர்கள் கோபக் கனலைக் கிளப்பியது. ஆகவே மிகெய்லோவிச், செட்னிக்ஸ் ஆகியோருடன் சேர்ந்து கொண்டு, க்ரோஷியாக் காரர்கள் மீது பழிவாங்க விரும்பினார்கள்.

செர்பியப் போலியான நோவிச்சைப் போல மிகெய்லோவிச்சும் ஒரு போலிப் பேர்வழிதான் என்று மார்ஷல் டைட்டோவின் "பார்டிசன்" கட்சியைச் சேர்ந்த அதி தீவிரவாதிகள் கூறினார்கள். இது உண்மையல்ல; எப்படி என்றால், ஜெர்மன் படையெடுப்பிற்குப் பிறகு, மிஞ்சியிருந்த யூகோஸ்லாவியப் படையினரைத் திரட்டி ஒரு போராடத்தக்க படையாக அமைத்தவர் மிகெய்லோவிச் தான். செர்பியா நாஜிகள் வசம் நன்றாகச் சிக்கிக் கொண்டிருக்கிறது. ஆகவேதான் மிகெய்லோவிச்சுங் கூட படிப்படியாக ஜெர்மானியர்களோடு ஒத்துழைக்க வேண்டிய நிர்ப்பந்த நிலைமைக்கு உள்ளாக வேண்டியிருந்தது. அங்கே புகழ் வாய்ந்த கொரில்லா படை கூட்டங்கள் இருக்கின்றன. பழைய செர்பியப் படைகளின் பகுதியாம் இவை. மிகெய்லோவிச்சுக்கும் ஜெர்மானியர்களுக்கும் இவைபற்றி ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன்படி இந்தப் படையினர் ஜெர்மானியர்களை ஒன்றும் செய்யக் கூடாதென்றும், அது போலவே, ஜெர்மானியர்களும் அவர்களையும் ஒன்றும் செய்யக்கூடாதென்றும் கட்டுப்பாடுகள் ஏற்படுத்திக் கொண்டனர்.

தேசிய ஒற்றுமை இயக்கம்

மிகெய்லோவிச் கட்சியை விட "பார்டிசன்" கட்சியினரின் எண்ணிக்கை வெகு அதிகம். க்ரோஷியாக் காரர்களும், ஸ்லொவனியர்களும் செர்பியர்களும் மார்ஷல் டைட்டோவும் ஏராளமாகச் சேர்ந்திருக்கிறார்கள். 2½ லட்சம் பேர்கள் இவருடன் சேர்ந்திருக்கிறார்கள். "இந்த வீரப் படையினரைச் சுற்றிலும் அவர்களுக்குள்ளாகவும் ஒரு தேசிய ஒற்றுமை இயக்கம் வளர்ந்து கொண்டு வருகிறது" என்று மிஸ்டர் சர்ச்சில் குறிப்பிட்டார். "இந்த இயக்கத்தைத் தோற்றுவித்த பெருமை கம்யூனிஸ்ட்டுகளுக்கு உரியது. இயக்கம் வலுப் பெற்று அதில் அநேகம் பேர்கள் சேர்ந்த பிறகு, இயக்கத்தைத் திருத்தி ஒற்றுமை படுத்தி தேசிய உணர்ச்சி ஊட்டப்பட்டது" என்றும் அவர் கூறுகிறார். ஸ்பெயின் தேசத்தில் உள்ள அரசரை ஆதரிக்கும் கட்சியைப் போலவே, மார்ஷல் டைட்டோவின் கம்யூனிஸ்ட் கூட்டத்தாரோடு, ஜனநாயகக் குடியரசுக் கட்சியாரும் தீவிர எதிர்ப்புக் கட்சியாரும் சேர்ந்து கொண்டனர். அங்கே நடை பெறும் யுத்தத்தின் நோக்கங்களாவன :—

1. ஜெர்மானியர்களிட மிருந்து நாட்டை மீட்பது.

2. செர்பியர்கள், க்ரோஷியாக்காரர்கள், ஸ்லோவேனியர்கள், மசிடோனியர்கள் ஆகியோர்களுடைய நாட்டு உரிமைகளை ஐக்கிய அரசாங்கத்தில் நிலை நாட்டுவது.

3. யூகோஸ்லாவிய மக்கள் அனைவருக்கும் ஜனநாயக விடுதலை யளிப்பது.

4. பொருளாதார வாழ்வில், தனிப்பட்ட முயற்சிக்கும் சொந்தச் சொத்துக்களுக்கும் பாதுகாப்பளித்தல்.

யூகோஸ்லாவியா சம்பந்தமாக நேச நாடுகளின் முக்கியமான நோக்கம் என்ன வென்றால், நாஜிகளை எதிர்ப்பது சம்பந்தமாக யூகோஸ்லாவியர்களுக்குத் தம்மாலியன்ற எல்லா வகை உதவிகளையும் செய்து பலப்படுத்துவது தான். மார்ஷல் டைட்டோவின் "பார்டிசன்" இயக்க வேலைகள், எட்ரியாடிக் கடலிலும் இத்தாலியிலும் நடைபெறும் போராட்டத்தில் கலந்து கொள்ளுவது தான்.

இந்த யுத்த முழக்கத்தின் பயனாகவும் மும்முரத்தின் பயனாகவும், மார்ஷல் டைட்டோ தலைமையில், யூகோஸ்லாவியாவிலுள்ள பல இனத்தவர்களுக்குள்ளாகவும் உண்டாகும் ஒற்றுமை, சமாதான காலத்திலும் நிலைத்திருக்குமா? யூகோஸ்லாவியாவின் பழைய சரித்திரத்தைக் கொண்டு பார்த்தால், இந்த ஒற்றுமை நிலைத்திருக்கக் கூடு மென்றே சொல்லலாம். அது வரை ஒத்துழைக்க மறுத்துக் கொண்டிருந்த செர்பிய ஜனநாயகக் கட்சியும் க்ரோஷிய விவசாயிகள் கட்சியும் சேர்ந்து 1942-ம் வருஷத்தில் ஒரு கூட்டு மந்திரி சபையை அமைத்தன. என்றாலும் இந்த அரசாங்கம் நெடு நாட்கள் நிலைத்திருக்க வில்லை. 1925-ம் வருஷத்தில், எதிர் பாராததோர் நிலைமை ஏற்பட்டது. முன்பு, ஒற்றுமைப் படுத்த முடியாத கட்சிகளாகக் கருதப்பட்டு வந்த க்ரோஷிய விவசாயக் கட்சியும், தீவிரக் கட்சியும் சேர்ந்து ஒரு கூட்டு மந்திரி சபை ஏற்பட்டது. இப்படிப்பட்ட ஒற்றுமைபற்றிய நினைவுகள் யூகோஸ்லாவியத் தலைவர்களுக்குத் தோன்றி எதிர் காலத்தில் அவர்களை ஊக்குவித்து, தேசிய ஒற்றுமையை அவர்கள் உண்டாக்குவார்கள் என்று எதிர்பார்ப்போமாக!

வானொலி நாட் குறிப்புக்கள்.

திருச்சி.—மார்ச்சு 4-ம் தேதி, மாலை 7 மணிக்கு "ஜப்பானியரின் ஆதிக்க உரிமைகள்" என்பதுபற்றி, மிஸ்டர் எஸ். தோத்தாத்திரி ஐயங்கார் பேசுவார்.

சென்னை.—மார்ச்சு 7-ம் தேதி மாலை 7 மணிக்கு மிஸ்டர் ஏ. காசிவிஸ்வநாதன் "யுத்தவிமரிசம்" செய்வார்.

சென்னை.—மார்ச்சுமீ 8-ம் தேதி மாலை 7 மணிக்கு "யுத்த முயற்சி" என்னும் தொடரில் மிஸ்டர் எம். இ. வீரபாகு பிள்ளை பேசுவார்.

அக்கிரம சேமிப்பும் அநியாய லாபமும்

சிங்கத்திற்கும் புலிக்கு முள்ள வேற்றுமை

பொது மக்களின் கடமை

(ராவ் பகதூர் சி. எம். இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள், பி.ஏ., பி.எல்.)

சிங்கம் பலமுள்ள ஜந்து. புலியைக் காட்டிலும் பலமுள்ளதென்பர். ஆனால் கம்பீரமானது. உதார குணமுள்ளது. புலியோ குரூரமானது. சுயநலக் குணம் பொருந்தியது. சிங்கம் பசித்த போது தான் இரை தேடும். தன் பசிக்குப் போதுமான இரை தான் உட்கொள்ளும். அளவுக்கு மிஞ்சி மிருக வதை புரியாது. மற்ற ஜந்துக்கள் இரை கொள்ளட்டும் என்று எண்ணி தாராளமான நோக்கத்துடன் உறங்கப் போகும். புலியோ பசித்தாலும் சரி, பசிக்காவிட்டாலும் சரி, எந்த மிருகம் எதிரில் வந்தாலும் கொன்று குவித்து விடும். இரை வீணாகப் போனாலென்ன. மற்ற ஜந்துக்களுக்கும் இரை இல்லாமல் போனாலென்ன? அதைப் பற்றிக் கவலை அது கொள்ளாது. இவ்விரண்டு மிருகங்களைப் போல சில குடித்தனக்காரர்களும், வியாபாரிகளும் இருக்கிறார்கள். சிலர் தங்கள் குடும்பத்திற்கு வேண்டிய பொருள்களை வைத்துக் கொண்டு மிச்சமானவைகளை பொது மக்களுக்குப் பகிர்ந்து கொடுப்பார்கள். அவர்கள் சிங்கத்தைப் போல உதார சீலர்கள் எனலாம். வேறு சிலரோ எல்லாப் பொருள்களையும் தம்மிடமே மறைத்து வைத்துக் கொண்டு பசியோடிருக்கும் ஏழைகளுக்குச் சிறிதும் கொடாமல் துரோகம் செய்வார்கள். இவர்கள் புலிபோல துர்ப்புத்தி படைத்தவர்கள். யுத்த காலத்தில் சிங்கத்தின் கம்பீர குணம் வேண்டுமே ஒழிய, புலியினுடைய குரூர குணம் கூடவே கூடாது.

பகற் கொள்ளைக்காரர்கள் யார்?

'எரிகிற வீட்டிலே பிடுங்கினது லாபம்' என்பது பழமொழி. யுத்தம் ஏற்பட்டவுடனே சில சுயநலப் புலிகள் கூடிய மட்டில் லாபம் பெற்று சீமான்கள் ஆக வேண்டும் என்று முயற்சிப்பார்கள். அவ்வாறு லாபம் பெறுவது, நியாய விரோதம் ஆகும். அதனைத் தடுப்பது அரசியலாரின் கடமை. மனிதனுக்கு அவசியமான பொருள்களாகிய உணவுப் பொருள்கள், ஆடை, உடைகள், தட்டு முட்டுச் சாமான்கள், நாணயங்கள் இவைகளை வெளிக்காட்டாமல் மறைத்து வைத்துக் கொண்டு சில வியாபாரிகள் அவைகள் இல்லாமல் தவிப்பவர்களுக்கு ஒன்றுக்குப் பத்தாக இரகசியமாக விற்பனை செய்வார்கள். உலகத்தில் அதைப் போல பெரிய பாபம் எதுவும் இல்லை. இப்படிப்பட்ட மனிதர்கள் பகற்கொள்ளைக்காரர்கள் அல்லவா? அரசியலார் எத்தனைக் கட்டுப்பாடு செய்த போதிலும் இரகசியமாக 'ப்ளாக் மார்கெட்' என்றதன் மூலம் திருட்டுத் தொழில் செய்பவர்கள் நாட்டுக்குத் துரோகிகள் அன்றோ? அரிசியோ, உப்போ, துணியோ, சில்லரைக் காசோ, காகிதமோ, இரப்பரோ எதுவானாலும்சரி, இரகசியமாக அதிக விலைக்கு விற்பது பெருத்த மோசடி ஆகும். அதனாலே ஜன சமூகத்திற்கும் தன்னைப் படைத்த கடவுளுக்கும் துரோகம் செய்தவர்கள் ஆவார்கள்.

இந்தப் பாவத்திற்கு விமோசனமில்லை

ஒரு தகப்பனுக்கு ஐந்து மக்கள் இருந்தால், ஐவரும் சரியான உணவு, உடை சௌகரியங்கள் பெற வேண்டும், என்பதே தகப்பனுடைய நோக்கமாகும். பெரியவன் பெரிய பங்கை எடுத்துக் கொண்டு சின்னவனுக்கு ஒரு சிறு பங்கு கொடுத்தால் தகப்பன் ஒப்புக் கொள்வானா? உலகில் எல்லா மக்களுக்கும் கடவுள் தகப்பனார். அவர் முன்னிலையில் கை வலுத்தவன் அவசியமான ஜீவனப் பொருள்களை யெல்லாம் சேகரித்து வைத்துக்கொண்டு, இளைத்தவனைச் சாகும்படி விட்டுவிட்டால், கடவுள் பொறுப்பாரா? முக்கியமாக உணவுப் பொருள்களை எவன் ஒருவன் சேகரித்து மறைத்து வைக்கிறானோ அவன் பெரிய பாவத்திற்கு உள் ஆகிறான். அப்படிப்பட்ட கொடிய பாவத்திற்கு விமோசனமோ, கழுவாயோ இல்லவே இல்லை.

மேலும் சட்டத்திற்கு விரோதமாக பொருள்களை மறைத்து வைப்பவன் பெரிய பேராசைக்காரன். பேராசைக்காரர்கள் எல்லாம் முடிவில் மோசம் போவது, நாம் கண்ட காட்சி. 'அதிக ஆசை அதிக நஷ்டம்' அல்லவா? சிறிய கழுத்துக் கொண்ட ஒரு குடத்தில், பக்ஷணம் இருந்தது. அதற்குள் ஒரு குரங்கு கைவிட்டது. பக்ஷணம் முழுதும் கையில் அமுக்கிக் கொண்டு கையை வெளியே எடுக்க முயன்றது. கையோ வெளியில் எடுக்க முடியவில்லை, திண்டாடிற்று. குடம் தான் கையோடு வந்தது. அது போல பேராசைக்காரர்கள் பொருள்களை மறைத்து வைத்துக்கொண்டு தாமும் சாப்பிடாமல், பிறருக்கும் கொடுக்காமல் குற்றத்தையும் பாவத்தையும் கைக் கொள்கிறார்கள்.

அவர்கள் திருட்டுத் தனமாக மறைத்து வைத்த பொருள்களை வெளியில் காட்ட முடியவில்லை. அழுகக் கூடிய பொருள்களை அடைத்து வைப்பதில், அவை அழுகிப் போகின்றன. முடிவில் அப்பொருள்கள் யாருக்கும் பயன் இல்லாமல் போய் விடுகின்றன. பேராசை வீண் ஆசையாக முடிகிறதல்லவா?

புதைத்த பணத்திற்கு 'பூதம்' காவல்

ஒருவன் பணத்தினுடைய அருமை தெரியாமல் புதைத்து வைக்கிறான். அது அவனுக்கும் பயனில்லை. பிறருக்கும் பயனில்லை. அதை ஒரு பூதம் வந்து காத்துக் கொள்ளுகிறதாம். நாளா வட்டத்தில் அது அப்பணத்தை எவரும் தொட விடுகிறதில்லையாம். இவ்வித கதைகள் நமது நாட்டுப் புறங்களில் பெருவாரியாக உலாவுவது உண்டு. அதுபோல உணவுப் பொருள்களை மறைத்து வைக்கும் பேராசைக்காரர்கள் அவைகளின் பயனை அடைவது இல்லை. உணவுப் பொருள்களை மூடி வைத்தாலோ புழுக்கள், எலிகள் நாசம் செய்கின்றன. குற்றம் வெளியானால் சிறைவாசம் கண்டிப்பு. தப்பித் தவறி விட்டால் திருடர் பயம். திருட்டு ஏற்பட்டால் வெளியே சொல்லவும் வெட்கம்.

ஆகவே, இவனுடைய புதையல்களுக்கு எத்தனை விதப் பூதங்கள் ஏற்படுகின்றன பாருங்கள்!

பொருளாதார நூலின்படி உலகத்தில் விளையும் பொருள்கள் மக்களின் வாழ்விற்குச் சமமாக பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும். அவை சில பேருக்கே உரியன அல்ல. பொருள்கள் ஒரே இடத்தில் குவிந்து கிடக்கக் கூடாது. அவை எப்போதும் செலாவணி ஆகிக் கொண்டு தான் இருக்க வேண்டும். காசு, துட்டு, பணம் எவ்வாறு செலாவணியாகித் திரிந்து கொண்டிருக்கிறதோ, அது போல மனிதனுக்கு அவசியமான பொருள்கள் எல்லாம் செலாவணியாகிக் கொண்டே இருக்கவேண்டும். அவ்வாறு செலாவணி ஆகாமல் தடுப்பது, ஒரு பொருளாதாரக் குற்றம் ஆகும். நாகரிகம் படைத்த நாடுகளில் அதனைச் சட்ட விரோதமாகப் பாவிப்பார்கள். ஆகவே, உணவு முதலிய அவசியப் பொருள்களை ஒரே இடத்தில் எந்த கருத்தைக் கொண்டு மூடி வைத்தாலும் அது பெருங் குற்றமே யாகும். அக்குற்றத்தை அறிவாளிகள் செய்ய மாட்டார்கள்.

அறியாமையும் அநாகரிகமும்

மனிதன் சுதந்திர உரிமை உள்ளவன் அல்லவா? அவன் பொருள் சம்பாதிப்பதைத் தடுக்க அரசியலார்க்கு அதிகாரம் உண்டா? என்று சிலர் கேட்கலாம். அவ்விதக் கேள்வி அறியாமையையும் அநாகரிகத்தையும் காட்டுகிறது. அது சிங்கத்தினுடைய குணமல்ல; புலியினுடைய குணமே யாகும். அடுத்த வீட்டுக்காரன் பசியோடிருக்கத் தான் அரிசியை மூடி வைத்திருந்தால், பாவம் அல்லவா? 'செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்', 'வேளாளன் என்பான் விருந்துண்டு வாழ்வான்' சுற்றந்

(8-ம் பக்கம் பார்க்க.)

அச்சுப் பிரசார ஆராய்ச்சி

சியாங்கே ஷெக் அம்மையார் எச்சரிக்கை ரூபகம்

இந்திய சிப்பாய்களை ஜப்பானியர் செய்த சித்திர வதை

(டி. ஏ. வி. நாதன்)

"உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்" என்பது நம் நாட்டு அறிவுரைகளில் ஒன்று. கீழ்த் திசையில் இந்த அறிவுரைக்குச் சான்ருக ஒரு நாட்டு மக்கள் இருக்கிருர்கள். அவர்களுடைய கொள்கை விவரிப்பைக் கேட்டால், ஆகா, இப்படியும் ஒரு அருமையான மக்கள் கூட்டம் இருக்குமா! என்று ஆச்சரியப்படும்படியாக இருக்கும். ஆனல் அவர்களுடைய உள்ளக் கருத்தின்படி நடக்கும் நடவடிக்கைகளை அறிந்தால், இவ்வளவு மோசமான மக்களுடைய அட்டகாசம் அழிந்து ஒழியும் நாள் எந்நாளோ? என்று நாம் கோரும்படியாக இருக்கும். பேசுவதோ "அகில கிழக்காசிய நல்வாழ்வுத் திட்டம்", கொள்கையோ புத்தபிரானுடைய "அஹிம்சா பரமோ தர்மா" என்கிற கொள்கை; ஆனல் நடத்தையோ முழுவதும் மாறுபாடானது. இதை இரண்டு வருஷங்களுக்கு முன் சியாங்கே ஷெக் அம்மையார் அழுத்தந் திருத்தமாகக் கூறியிருக்கிருர். டில்லி நகரில் இந்தியப் பெண்கள் கூட்டத்தில் பேசும்பேது :—

"சென்ற ஐந்து வருஷங்களாக, ஜப்பானியர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதையும், அவர்கள் சைனவில் என்ன செய்துகொண்டு வருகிருர்கள் என்பதையும், நான் அடிக்கடி விளக்கிக் கூறியிருக்கிறேன். அகில தேசீய விஷயங்களில் நம்பிக்கை காட்டி மோசம் செய்வதையே தம் அரசியல் நடை முறைத் திட்டமாகக் கொண்ட ஒரு நாட்டினரை, எந்தக் காலத்திலும் நீங்கள் நம்பக் கூடாது. உங்களுக்குச் சுதந்தரம் அளிப்பதற்காக நாங்கள் வருகிரேம் என்று அவர்கள் சொல்லுவார்கள். ஆனல் அது ஒரு பொய்,"

என்று சைனவில் ஒப்பற்ற பெண்மணி கூறியிருக்கிருர். ஜப்பானியர்களுடைய யோகியதையற்ற தன்மை, பல தடவைகளில் வெளியா யிருக்கிறது. என்ருலும், சமீபத்தில் வெளியானதைப் போல அவ்வளவு விளக்கமாக எப்போதும் வெளியாக வில்லை என்று சொல்லலாம். இந்தியர்களுக்குச் சுதந்தரம் அளிப்பதாக வல்லவா அவர்கள் கூறுகிருர்கள்? ஆனல் அவர்களுடைய கையில் சிக்கிய இந்திய யுத்தக் கைதிகளை அவர்கள் எம்மாதிரியாக நடத்தி வருகிருர்கள்? மிகமிகக் கொடூரமாக நடத்திக் கொண்டு வருகிருர்கள். இதைப் பற்றிய விவரங்களை, பிரிட்டிஷ் அயல் நாட்டு மந்திரி, மிஸ்டர் ஈடன் சமீபத்தில் கூறியிருக்கிருர். ஜனவரி மாதம் 28-ந் தேதி பார்லிமெண்டு சபையில் அவர் படித்த அறிக்கையில், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த யுத்தக் கைதிகளை ஜப்பானியர்கள் மிகவும் கொடூரமாக நடத்தி வருகிருர்கள் என்றும், அதன் பயனுக ஆயிரக் கணக்கான கைதிகள் இறந்து போனுர்களென்றும் குறிப்பிட்டார். இந்திய யுத்தக் கைதிகளைப் பற்றி அவர் கூறியதாவது :—

"பர்மாவில் கைப்பற்றப்பட்ட அநேக இந்திய சிப்பாய்கள் கூட்டங் கூட்டமாக பாதைகளில் உட்கார வைக்கப் பட்டார்கள். முதுகுப் பக்கத்தில் அவர்களுடைய கைகள் கட்டப்பட்டன. பின் பக்கத்திலிருந்து ஜப்பானியர்கள் அவர்களைத் துப்பாக்கி முனைக் கத்திகளால் மும்மூன்று தடவை குத்திஞர்கள். இதில் தப்பிப் பிழைத்தது ஒரு இந்திய சிப்பாய் தான். மூர்ச்சையடைந்து, பிறகு தப்பித்துக் கொண்டு நமது துருப்புகளிடம் வந்து சேர்ந்த இந்த சிப்பாயின் மூலம் தான், நமக்கு இந்த விவரங்கள் தெரிய வந்தன.

இந்திய அரசாங்கத்தார் வெளியீடுகள்

மிஸ்டர் ஈடன் இன்னும் பல விவரங்களை வெளியிட்டிருக்கிருர். அவை நாகரிக உலக மக்களிடையே மயிர்க் கூச்செறியும்படியான அருவருப்பையும் கோபத்தையும் உண்டாக்கி யிருக்கின்றன. இன்னும் சில விவரங்கள் இந்திய அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட ஜப்பானிய ராணுவ அதிகாரிகளுடைய நாட் குறிப்புப் புத்தகங்களிலிருந்தும், ரோந்து பார்க்கச் சென்ற நமது



சைனவின் ஒப்பற்ற பெண்மணி, சியாங்கே ஷெக் அம்மையார்.

சிப்பாய்கள் பர்மிய மக்களை விசாரித்தறிந்த விவரங்களிலிருந்தும், இன்னும் சில அக்கிரமங்கள் வெளியாய் விட்டன. அவற்றில் ஒன்றிரண்டை மாத்திரம் இங்கு குறிப்பிடலாம்.

ஜப்பானிய ராணுவத் தலைவர்கள் ஒரு நாள் இரவு உணவருந்தி உல்லாசமாக இருக்கும் சமயத்தில், கைப்பிடியாகப் பிடிக்கப்பட்ட ஒரு இந்திய ராணுவத் தலைவர் கொண்டுவரப்பட்டார். அவரை மேஜையின் மேல் படுக்க வைத்து ஒவ்வொரு அங்கமாக வெட்டி ஜப்பானியர்கள் உடற்கூறு ஆராய்ச்சி செய்தார்களாம்!

மற்றொரு சமயம், மூன்று இந்திய யுத்தக் கைதிகள் தப்பி ஓடினுர்கள். அவர்கள் மீண்டும் ஜப்பானியர்களால் கைப்பற்றப் பட்டார்கள். இரண்டு பேர் தூக்கிலிடப் பட்டு உடனே கொல்லப் பட்டார்கள். மூன்ருவது இந்தியர் உடற் கூறு செய்வதற்காக ஒரு டாக்டரிடம் ஒப்படைக்கப் பட்டார்!

இந்த இரண்டு சித்திரவதை சம்பவங்கள் ஜப்பானியத் தலைவர்களுடைய குறிப்புப் புத்தகங்களில் காணப்பட்டவை!

இப்படிப்பட்ட ஜப்பானிய அக்கிரமங்கள் வெளியான விஷயம் ஜப்பானியப் பிரசார இலாகாவுக்குக் கஷ்டத்தைக் கொடுத்திருக்கிறது. ஏனென்ருல், அகில தேசீய சட்டத்துக்குத் தான் கட்டுப்பட்டு, அதன்படி யுத்தக் கைதிகளை ஒழுங்காக நடத்துவதாக, ஜப்பான் கூறிக்கொண்டு வந்திருக்கிறது. 'ஹேக் கன்வென்ஷன்' என்ற அகில தேசிய ஒப்பந்தத்தில் ஜப்பான் கையெழுத்திட்டிருக்கிறது. யுத்தம் தொடங்குவதற்கு முன், 'ஜினீவா கன்வென்ஷன்' என்று பிரசித்தி பெற்ற ஒழுங்கு ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டிருக்கிறது. இதற்கு முன், ஐரோப்பிய அரசுகளின் மேல் நடத்திய இரண்டு பெரும் யுத்தங்களில், ஜப்பான் அகில தேசீய சட்டத்தை கடுமையான புகார் ஒன்றும் இல்லாமல் அனுசரித்து, யுத்தக் கைதிகளை ஏறக்குறைய ஒழுங்காக நடத்தி வந்திருக்கிற தென்று சொல்லலாம். ஆகையால், இப்போது வெளியான விவரங்கள் ஜப்பானுக்குக் கவலையைக் கொடுத்திருக்கின்றன. பிப்ரவரி 6-ந் தேதி, டோக்கியோ வானெலி நிலையம், இதற்குப் பதிலளித்திருக்கிறது. எப்படிப்பட்ட பதில்? ஒரேயடியாக, "இல்லை", என்ற பதில் தான்! பெரிய மலையை ஒருவன் குடையால் மறைக்கப் பார்த்தாலும்; அதைப்போலிருக்கிறது டோக்கியோவின் அசட்டுத்தனமான "இல்லை"!

வேலிக்கு ஓணன் சாட்சி!

இந்தப் பெரும் பொய்க்கு ஆதாரமாக டோக்கியோ ஒரு மேற்கோள் கூறுகிறது. ஜப்பானிய பிரசார இலாகாவைச் சேர்ந்த 'இகடாசி' என்பவர்,

"அகில தேச நியாயத்தையும், அன்பு மயமான மக்கள் தத்துவத்தையும் அடைவது தான் ஜப்பானுடைய யுத்த லட்சியங்கள்,"

என்று கூறியிருக்கிருராம். ஆகையால் யுத்தக் கைதிகளைப் பற்றிய குற்றச் சாட்டுகள் உண்மையல்ல, என்று டோக்கியோ கூறுகிறது. 'வேலிக்கு ஓணன் சாட்சி' என்று சொல்வார்கள். அதைப் போல ஜப்பானுக்கு சாட்சி ஜப்பானிய பிரசார இலாகாத் தலைவர்! ஆனல் டோக்கியோ இத்தோடு நின்று விடவில்லை. ஓணனுடைய சாட்சியத்துக்கு மதிப்பில்லை யல்லவா? ஆகையால், "ஜப்பானியர்கள் யுத்தக் கைதிகளை ஒழுங்காக நடத்துகிருர்கள் என்று நடுநிலைமை நாடுகள் உறுதியாக உணர்ந்திருக்கின்றன," என்று ஒரு சரடு திரித்திருக்கிறது.

எந்த நடுநிலைமை நாடுகள் என்ற விஷயம் வெளிவரவில்லை. உண்மையாக இருந்தால், பெயர் விவரத்துடன் வந்திருக்குமல்லவா?

உண்மை என்னமோ ஜப்பான் கூறுவதற்கு மாருக இருக்கிறது. ஸ்வீடன் என்ற நடுநிலைமை நாட்டிலுள்ள 'அப்டன் டிட்னிங்கன்' என்ற பத்திரிகை கூறுவதாவது :—

"கொடூரம் என்பது ஜப்பானியர்களுடைய திட்டத்தில் ஒரு அம்சமாகும். மக்களிடத்தில் உண்மை யன்பு, அகில தேசீய சட்ட ஒழுங்கு, அல்லது பழிக்குப் பழி வாங்கப்படும் என்ற பயம், ஆகிய எதுவும் ஜப்பானியச் சக்கிரவர்த்தியின் 'தெய்வீக' மான சிப்பாய்களை ஒரு சிறிதும் அசைக்காது."

ஸ்வீடிஷ் பத்திரிகை நடுநிலைமையா யுள்ளவர்களுடைய அபிப்ராயத்தை வற்புறுத்திக் காட்டியிருக்கிறது. அதில், 'பழிக்குப் பழி வாங்கப்படும் என்ற பயத்'தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறது. இதைப் பற்றி நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய டோக்கியோ பிரசாரம் ஒன்றுண்டு. இந்துஸ்தானி மொழியில் செய்யப்பட்ட ஒலிபரப்பில், டோக்கியோ கூறுகிறது :—

"இந்தக் கடுமையான யுத்தத் தீயில் பிரிட்டனும் அமெரிக்காவும் உலகத்தைத் தள்ளிவிட்டன. ஜப்பான், யுத்தத்தில் ஈடுபடாமல் நடுநிலைமை வகிப்பதற்கு எவ்வளவோ முயற்சி செய்தது. டிசம்பர் 1941-ம் வருஷம் வரையில் தான் அப்படி யிருக்க முடிந்தது".

அபாண்டமான பொய்

இது எப்படிப்பட்ட அபாண்டமான பொய்! வாஷிங்டனில், இரண்டு தேச ஸ்தானிகர்கள் சமரசப் பேச்சு பேசிக் கொண்டிருக்கும்போது, மோசத்தனமாக பெர்ல் ஹார்பரைத் தாக்கியதா நடுநிலைமை? ஏன் ஜப்பான் யுத்தத் தீயில் பாய்ந்தது? யார் இந்த யுத்தத் தீயை முதலில் உண்டாக்கினுர்கள்? ஐரோப்பிய யுத்தம் ஆரம்பிப்பதற்குச் சில வருஷங்களுக்கு முன்னமேயே ஜப்பான் சைனவின்மேல் போர் தொடுத்தது. பிரிட்டனும் அமெரிக்காவும் சைனவின் மாபெருந் தலைவர் ஜெனரலிஸ்ஸிமோ சியாங்கேஷெக் அவர்களுடைய சுதந்தரப் போராட்டத்துக்கு ஆதரவு அளித்தது தான் ஜப்பானுக்குக் கோபத்தை உண்டாக்கிவிட்டது. அதனல் தான் தூரக் கிழக்குப் பிரதேசத்தில் இருந்த சிறு யுத்தத் தீயை பெருங் காட்டுத் தீயாக ஜப்பான் மாற்றிவிட்டது.

"யுத்தத்தை ஆரம்பித்த குற்றவாளிகள் யார்?" என்ற பிரச்சினையை ஏன் இப்போது டோக்கியோ கிளப்பவேண்டும் என்று கேட்கலாம். சமீபத்தில் ரஷ்யாவில் நடந்த கார்கோப் விசாரணைகள் அச்சு

(10-ம் பக்கம் பார்க்க)

யுத்த காலத்தில் அரசாங்க உதவி

சேலம்.—பங்கிட்டு முறை ஏற்பாடுகள் திருப்திகரமாக இருப்பதின் காரணமாக, பங்கீடு டிப்போக்கள் மூலமாக பொது மக்களுக்கு அரிசி அரசாங்கத்தாரால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு, சுலபமாகக் கிடைத்து வருகிறது. சேலம் கலெக்டர் ஆபீசில் வழக்கம்போல் பிரதி தினமும் ஏழைகளுக்கு ஸ்ரீமதி பெட் அம்மையாரின் ஆதரவில் உணவு அளிக்கப்பட்டு வருகிறது. இத் தாலூகாவிலுள்ள போடி நாயக்கம்பட்டியில் பிச்சைக் காரர்களுக்கும் அனாதிகளுக்கும் ஒரு விடுதி ஏற்படுத்தி உணவளிக்க ஒரு நிதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இத் தாலூகாவில் அநேக கிராமங்களில் தீர்வையின்றி சர்க்கார் தரிசு நிலங்களில் உணவு தானியங்கள் சாகுபடி செய்ய அநேக குடிகளுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது மேலும் சர்க்காரால் குடியானவர்களுக்கு சாகுபடி செய்யவும் விவசாயத்துக்குச் சாதனமான கருவிகளை வாங்கவும், வட்டியின்றி கடன் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆதிதிராவிடர்கள் உபயோகத்திற்காக அநேக இடங்களில் அரசாங்கக் கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன.

ஏற்காடு.—இவ்வூர் எஸ்டேட்டுகளில் வேலை செய்யும் கூலிகளுக்கு ஜில்லா கலெக்டரால் எஸ்டேட் சொந்தக் காரர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் பிரத்யேகமான அனுமதியால், உணவுப் பொருள்கள் கஷ்டமின்றிக் கிடைத்து வருகின்றன.

பெண்ணாகரம்.—இந்த சப்-தாலூகாவில் அநேக குடிகளுக்குத் தீர்வை யின்றி சர்க்கார் தரிசு நிலங்களில் உணவு தானியங்கள் சாகுபடி செய்ய அனுமதி கொடுத் திருக்கிறார்கள். வேண்டிய அளவிற்கு மேல் நெல் கேழ்வரகு முதலிய உணவு தானியங்கள் அறுவடையாகி யிருப்பதால், உணவுப் பொருள் கஷ்டமில்லை.

இந்த ஜில்லாவிலுள்ள மற்ற இடங்களில் "உணவுப் பொருள் டிப்போக்கள்" மூலமாக ஜனங்களுக்கு உணவு தானியங்கள் நியாயமான விலைக்கு விற்கப்பட்டு வருகின்றன. விறகு மண்ணெண்ணை சர்க்கரை முதலியவை கஷ்டமின்றி அநேகமாக எல்லா விடங்களிலும் கிடைத்து வருகின்றன.

இராமநாதபுரம் ஜில்லா.—உணவுப் பிரச்சினை.—உணவுப் பொருள்கள் போதுமான அளவு கிடைக்கா விட்டாலும் கிடைக்கிற உணவுப் பொருள்கள் பட்சபாதக மன்னியில் ஏழைகளுக்கும், பணக்காரர்களுக்கும் பகிர்ந்து விநியோகிக்கப்பட்டு வருகிறது. விருதுநகரில் 1944-ம் ஞு பிப்ரவரி மீ 17உயில் பங்கீட்டுத் திட்டம் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது. பொது ஜனங்கள் ஏமாற்றி, தங்கள் தேவைக்கு அதிகமான உணவுப் பொருள்களை வாங்காதபடி பங்கீட்டு உத்தியோகஸ்தர்களும், சிப்பந்திகளும், அதி தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

துணி வகைகள்.—துணிக் கட்டுப்பாடு உத்தரவு மும்முரமாக அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. உத்தரவிற்கு மீறி நடக்கும் வியாபாரிகளை, தகுந்த தண்டனைக்கு உள்ளாக்குகிறார்கள்.

ஏனைய கட்டுப்பாட்டுப் பொருள்களும் ஜனங்களுக்கு இலகுவாகக் கிடைக்கும்படி செய்யப்பட்டிருக்கிறது.

பர்மா மலேயா வினின்றும் யுத்தங் காரணமாக வெளியேறி வந்துள்ளவர்களுக்கு உதவி.—இவர்களுக்குப் பணப்படி கொடுத்தோ அல்லது உத்தியோகம் கொடுத்தோ அரசாங்கத்தார் உதவி செய்துவருகிறார்கள். இராமநாதபுரம் கலெக்டர் தன்னுடைய ஆபீசில் பர்மாவிலிருந்து வந்த ஒருவருக்கு தற்காலீகமாக குமாஸ்தா உத்தியோகம் கொடுத்திருக்கிறார். மேலும் கலெக்டர் சிபார்சின் பேரில்; ராணுவத்திற்கு ஆள் சேர்க்கும் உத்தியோகஸ்தராக மிஸ்டர் P. பெரியசாமி B.Sc., B.L., என்பவரை பரமக்குடியில் நியமித்திருக்கிறார்.

தேசீய யுத்த முன்னணி உத்தியோகஸ்தர்களும் தங்களா லியன்ற பொது ஜன உதவி செய்து வருகிறார்கள்.

நீலகிரி ஜில்லா—அரிசி பங்கிடும் திட்டம் உதகையில் ஆரம்பிப்பதற்கு வேண்டிய வசதிகளை அமைப்பதில் நீலகிரி தேசீயப் போர் முன்னணி ஈடுபட்டிருந்தது. தேசீயப் போர் முன்னணியின் பிரசார வண்டி பங்கிடும் திட்டத்தின் விதிகளை உதகை பூராவும் ஒலி பரப்பும் கருவியின் வாயிலாக எடுத்து மக்களுக்குப் போதித்தது.

அநேக போர் வீரர்களது குடும்பங்களிடம் தேசீய முன்னணியின் உதவி அமைப்பாளரும் ஏனைய தாலூகா பிரசாரகர்களும் விஜயம் செய்து அவர்களுக்கு அநேக விதங்களில் உதவி புரிந்து வந்திருக்கின்றனர்.

கோயமுத்தூர் ஜில்லா.—கோயமுத்தூர், திருப்பூர், ஈரோடு, தாராபுரம், உடுமலைப்பேட்டை இந்த டவுன்களில் அரிசிப் பங்கீடு முறை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஜனங்களுக்குப் பங்கீடு முறையில் போதுமான அளவு அரிசி வழங்கப்பட்டு வருகிறது. கிராமங்களில் ரெவினியு அதிகாரிகள், சில்லரை வியாபாரிகள் மூலியமாய் பச்சை, புழுங்கல் அரிசி ஜனங்களுக்குச் சப்ளை செய்து வருகிறார்கள். தவிரவும் வெளி ஊர்களிலிருந்தும், கம்பு, சோளம் முதலிய தானியங்கள் அரசாங்கத்தாரால் தருவிக்கப்பட்டு ஜனங்களுக்கு விற்கப்பட்டு வருகிறது. யுத்தத்திற்குச் சென்றுள்ளவர்களின் குடும்பத்தார்களுக்கு, போதுமான அளவு அரிசி, சர்க்கரை, சீமை எண்ணெய் முதலியன கொடுக்கப்பட்டு வருகின்றன. கோயமுத்தூர் டவுனில் இருந்த விறகுக் கஷ்டத்தைப் போக்குவதற்கு, மலபார் ஜில்லாவி லிருந்தும், கோயமுத்தூர் தாலூகா ஆலந்துரை பக்கத்திலிருந்தும், விறகு டிப்போக்களுக்கு வந்து கொண்டிருப்பதால், அவ்வளவு கஷ்டம் இப்பொழுது இல்லை. ரூபாய்க்கு 1 3/8 பட்டணம் படி, துவரம் பருப்பு விற்கப்பட்டு வருகிறது.

தவிர, துணிமணிகள் எல்லா ஜனங்களுக்கும் கிடைப்பதற்காக, மில்லிலிருந்து நூற்கப்படும் நூல், நெய்யப்படும் துணிகள் இவைகளை அரசாங்கத்தார் கட்டுமானப்படுத்தி யிருக்கிறார்கள். அரசாங்கத்தார் நிர்ணயித்த விலைக்கு மேல் விற்கக்கூடாது. தவிர, அரசாங்கத்தார் முத்திரை யிடாத துணிகளையும், விலை நிர்ணயிக்காத துணிகளையும், கைப்பற்றி முத்திரை யிடப்பட்டிருக்கிறது.

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

தழுவி நிற்றலே சிறந்த ஒழுக்கம்' என்று நம் பண்டைப் பெரியார்கள் கூறியுள்ளார்கள், அல்லவா? 'அறஞ்செய விரும்பு' 'ஐயமிட்டுண்' என்று பன்னிப் பன்னி ஔவைப் பிராட்டியார் கூறியுள்ள நீதிப்படி ஒழுகும் நம் நாட்டார், உரிமை என்ற சொல்லின் அறைகுறைப் பொருள்களைக் கொண்டு வாதாடுவது நம் அறிவுக்கு அழகாகுமா?

கொசுக் கடியும் யானை இடியும்

தற்போது, இப்போர் ஏற்பட்ட பிறகு, பல்வித விபரீத காட்சிகளை நாம் ஒவ்வொருவரும் நேரில் கண்டு பரிதவிக்கிறோம். ஒரே ஊரில் ஒரு சிங்கார மாளிகையில் ஒரு தனவந்தன் விலை உயர்ந்த உடைகளை அணிந்து கொண்டு ஆடல் பாடல்களில் காலம் கழித்துக் கொண்டு அமிர்த பானம் செய்து கொண்டு வாழ்வான். அடுத்த குடிசையில் உண்ண உணவும், குடிக்கக் கூழும், உடுக்கக் கந்தையும் இன்றி ஒரு கூலியாள் தவிப்பான். பொருள்களின் விலை ஒரே கணத்தில் ஏறிப் போகவே, தனவானுக்கு அது கொசுக் கடி போல் இருக்கிறது. ஆனால் கூலிக்காரனுக்கோ யானை இடிபோல் ஆகிறது. தனவந்தனிடம் 10,000 கலம் நெல் சேரிருக்கும். கூலியாளுக்கு அதனால் என்ன பலன். நெல் கலத்தின் விலை 2 ரூபாயாக இருந்தது 5 ரூபாயாகிவிடுமாயின் ஏழைக் கூலி என்ன செய்வான். துணி கெஜம் 8 அணாவிற்கு விற்றது 2 ரூபாயானால் எவ்வாறு துணி கட்டுவான். இவ்விதக் கொடுமை நாடெங்கும் பரவியது அரசியலார் இதனை கண்டு சரியான பரிகாரம் தேடினார்கள். அரிசி, துணி முதலியவைகளின் விலைகளை நிர்ணயித்து எவரும் அளவிற்கு மிஞ்சி சேகரம் செய்யக் கூடாதென்று கட்டளை இட்டார்கள். மீறினவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். குற்றங்களைக் கண்டு பிடிக்க உளவாளிகளும் ஏற்பட்டார்கள். அப்போதுதான் துன்பத்தையே அறிந்திராத தனவந்தன், துன்பத்தின் ருசி அறிந்தான். சென்னை முதலிய நகரங்களில் வசிக்கும் சீமான்களும், ஏழைகள் உண்ணும் அரிசியை சில நாட்கள் உண்ண வேண்டி வந்தது. அப்போது அவர்கள் முகக்கோணலைப் பார்க்க வேண்டும்! இந்த ஒரு அனுபவமே போதும். தனவந்தனையும் ஏழையையும் சமம் ஆக்கிவிட்டது எனலாம். இதை அறிந்தாகிலும் மக்கள் நீதியைக் கையாளுவார்களாக!

தொடங்கும் போது துன்பம்; பிறகு இன்பம்

சாதாரண காலங்களில் உணவுப் பொருள் நெருக்கடி தோன்றுவதில்லை. போர் முதிர்ந்து பெருந் துன்பம் விளைகிற காலத்தில் தான் அதன் நெருக்கடி அதிகமாகத் தோன்றும். அக்காலத்திலும் மக்கள் துயரம் அடையாமல் இன்பவாழ்வு பெற வேண்டுமானால் அரசியலார் மக்களுக்காக அவசியமான விதிகளை ஏற்படுத்துதல் வேண்டும். அவ்விதிகள் முதலில் கொடுமையாகத் தோன்றினாலும், உண்மையில் கொடுமையானவை அல்ல. நன்மையையே பயப்பனவாகும்.

'தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும்' என்ற பெரியார் வாக்கின்படி, உணவுப் பொருள்களைப் பற்றிய விதிகளே நம் மக்களுக்கு நற்பயன் தருவனவாம். இவ்விதிகளை அனுசரிப்பதில் அரசியலாரோடு நாம் ஒத்துழைக்க வேண்டும். கொள்ளைக்காரப் புலிகளை வெருட்டித் துரத்த வேண்டும். உதாரசீல சிங்கங்களையே போற்ற வேண்டும். அவ்வாறு செய்தால், மக்கள் துயரத்தி லிருந்து காப்பாற்றப்படுவார்கள். போரும் வெற்றி அடையும். போருக்குப் பின்னும் நாடு நலிவுறாமல் மேன்மையடையும். அதனையே கோருவோமாக!

[சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தி லிருந்து சமீபத்தில் ஒலிபரப்பப் பட்டதோர் பிரசங்கம்.]

கப்பற் படையிற் சேர்ந்து உயர் வாழ்வடையுங்கள்

கப்பல் படை காப்டன் சப்-லெப்டினெனட் கே. பி. நாயரிடமிருந்து மாலுமி அன்சால்மோஸ் அப்பச்சன் தன் சம்பளத்தை பெற்றுக்கொள்ளுகிறுர்.



இந்திய கப்பற் படையைச் சேர்ந்த ரோந்துக் கப்பலின் இந்திய மாலுமிகள் தம் ஊராருக்குக் கடிதங்கள் எழுதுவதும், வந்த கடிதங்களை வாசிப்பதும் காண்க.



நடுக் கடலி லிருக்கும் இந்திய போர்க் கப்பல்களி லிருந்து அனுப்பப்படும் தந்தி யில்லாக் கம்பிச் செய்திகளை ஒரு இந்தியத் துறை முகத்தில், தந்தி வேலைக்காரர்கள் பதிவு செய்கிறுர்கள்.



தம் கப்பலை அழகு படுத்தும் பொருட்டு, இந்தியப் போர்க் கப்பலைச் சேர்ந்த இந்திய மாலுமிகள் தம் கப்பலுக்கு வர்ணங்கள் தீட்டுகிறார்கள்

இந்தியப் பாதுகாப்பு ஆலோசனைக் கமிட்டியினர் சமீபத்தில் கராச்சிக்கு விஜயம் செய்து 3 நாட்கள் தங்கி யிருந்த போது, இந்திய கப்பற் படைப் பயிற்சி சாலையைப் பார்வை யிட்டனர்.

ரோந்து போகும் ஒரு இந்திய போர்க் கப்பலின் மேல், எதிரி நீர் மூழ்கிக் கப்பல்களை மூழ்கித் தாக்கக் கூடிய வெடி குண்டுகளை ஏற்றுகின்றனர்.

இந்தியக் கப்பற் படையின் பழம் பெருமை

இந்தியாவில் நீங்கள் எங்கே வேண்டுமானாலும் போங்கள். உள் நாட்டில் எந்த ஊருக்குப் போனாலும் சரி. அப்போது, இந்தியப் படைகளுக்கு எவ்வளவு பரந்த செல்வாக்கு இருக்கிறது என்பது அடிக்கடி உங்கள் ஞாபகத்திற்கு வரும். அதாவது அங்கேயுங் கூட சிப்பாய்களையும், இராணுவ மோட்டார் 'லாரி' களையும் காண்பீர்கள், அல்லது, எல்லா இனங்களையும் மதங்களையும் சேர்ந்த சாதாரண நிலைமையிலுள்ள இந்தியர்களோடு பேசுவதனாலும் உணர்ந்து கொள்ளுவீர்கள். அவாகளுக்கு இந்தச் செல்வாக்கிருப்பது இயற்கை தான். இந்தியாவின் பூகோள நிலைக்கும், மகத்தான பண்டையச் சரித்திரத்திற்கும் பொருத்தமாயிருக்கிறது. இந்திய இராணுவ பலத்திற்கே, இந்தியாவின் இராணுவந் தான் மகா முக்கியமானது என்பது தான், இந்தியப் பொது மக்களின் எண்ணம்,

கப்பற் படை பெருகுகிறது.

கப்பற் படையைச் சேர்ந்த எந்த உத்தியோகஸ்தராவது, சிப்பாயாவது இந்தியாவின் உள் நாட்டில் எங்காவது காணப்பட்டால், அது ஒரு பெரிய ஆச்சரியமான சம்பவமாக இன்றுங் கூடப் பேசுகிறார்கள். இந்த நிலைமை இப்போது படிப்படியாக மாறிக் கொண்டு வருகிறது. யுத்தம் ஆரம்பமான காலம் முதல், இந்திய கப்பற் படை வெகு விரைவாகப் பெருகிக் கொண்டு வருகிறது. இதன் பயனாக, பொது மக்களுக்கு இது வரை அவ்வளவாகத் தெரியாதிருந்த இந்தப் படை, இப்போது கொஞ்சங் கொஞ்சமாகத் தெரியவருகிறது. முன்பு, கப்பற் படை உத்தியோகஸ்தர் ஒருவர் தன்னுடைய கோடைக்கால உடைகளணிந்து உள் நாட்டிற்குப் போனால், அவரை, அங்குள்ளவர்கள், ஒரு ரயில்வே உத்தியோகஸ்தரென்றோ, பாதிரியாரென்றோ, தீயணைக்கும் படைத் தலைவரென்றோ நினைக்கத் தக்க அவ்வளவு அறியாமையில் மூழ்கியிருந்த ஜில்லாக்களிலும் பகுதிகளிலும், கப்பற் படைக்கு ஆள்திரட்டும் பிரசாரத்தின் பயனாக, கப்பற் படையைப் பற்றிய எல்லா விவரங்களும் நன்றாகப் பரவிவிட்டன.

நெடு நாட்களாக இந்திய வியாபாரக் கப்பல்கள் இருந்து வந்தன. அவற்றினின்று தான் இந்திய கப்பற் படை 10 வருஷங்களுக்கு முன் தோன்றியது. அக்காலத்தில் வியாபாரக் கப்பல்களை நடத்தியவர்கள் அத்தனைப் பேரும் கொங்கண கடற்கரைப் பகுதியினர்தான்.

விஞ்ஞான விசித்திரம்

பழைய காலத்துக் கப்பல்களுக்கும் தற்காலத்திய 'ஜம்னா' போன்ற போர்க் கப்பல்களுக்கும் மிகுந்த வேற்றுமையுண்டு. தற்காலத்திய போர்க் கப்பல்களிலிருப்பவர்களுக்கு, கப்பல் தொழில் ஞானமும் கப்பலோட்டும் திறமையும் மிகவும் அவசியம். ஒரு கப்பல் போராட்டத்தில், போர்க் கப்பல்களிலுள்ள தளவாடங்களையும், அவற்றைக் கையாள அங்கிருக்கிறவர்களுக்குள்ள திறமையையும் பொருத்துத் தான் வெற்றி கிடைக்கும். கப்பல் பீரங்கி, 'டார்பிடோ', நீர் மூழ்கிக் கப்பல்கள், வேவு கண்டு பிடித்தல், கண்களால் காணத் தக்கபடி சமிக்ஞை செய்தல், கம்பியில்லாத் தந்தி ஆகியவற்றிற்கெல்லாம், உடலுறுதியும் போராடும் உணர்ச்சியுமுள்ளவர்களாயிருந்தால் மட்டும் போதாது; கப்பற் படைக்குத் தேவையான புத்திக் கூர்மையும் இருக்க வேண்டும். பழைய கண்ணிய மிக்க கப்பற் படைப் பெருமையை மீண்டும் நிலை நாட்டவேண்டி, இப்போது உள் நாட்டிலிருந்தும் கப்பற் படைக்கு ஆட்கள் திரட்டப்படுகிறார்கள். பல வருஷங்களாக, பஞ்சாபைச் சேர்ந்த சில பகுதிகளிலுள்ளவர்களில் ஒரு சிலர் கப்பற் படையில் சேர்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் கடலுக்கு நூற்றுக் கணக்கான மைல்களுக்கு அப்பால் வசிப்பவர்களானாலும், பீரங்கிகளைக் கையாளுவதிலும், 'இஞ்சின்' அறையில் வேலை செய்வதிலும் மிகவும் கெட்டிக்காரர்களாயிருக்கிறார்கள். கப்பற் படையில் நல்ல பயிற்சியும் சுக வாழ்வும் கிடைக்கிறது. ஆகவே, இந்தியாவின் பல பகுதிகளிலும் வாழ்க்கை நல மோங்க இடமுண்டாகிறது.

'பெங்கால்' வெற்றி

காலத்திற் கேற்றபடி ஆற்றப்படும் செய்கைகளைப் பொருத்துத் தான் தற்காலப் போர்க் கப்பல்களின் புகழும் அமையும். இந்தியப் போர்க் கப்பல்களின் அருஞ் செயல்கள் அனைவரும் அறிந்ததே. என்றாலும், வெளியூர்களிலும் உள் நாடுகளிலும் இது நன்றாகப் பரவியதாகக் கூறுவதற்கில்லை. 'பெங்கால்' என்னும் இந்திய போர்க் கப்பல் சிறியது தான். அதிலிருந்ததெல்லாம் ஒரு '12 பவுண்டர்' பீரங்கி தான். நடுக் கடலில், இது போய்க் கொண்டிருக்கும்போது, இரண்டு பெரிய ஜப்பானியக் கப்பல்கள் வந்தன. அவற்றில் மிகவும் பலமான தளவாடங்களிருந்தன. 'பெங்கால்' உறுதி கொண்டது. பீரங்கிக் குறி தவறாமல் எதிரிக் கப்பல்களைத் தாக்கியது. அவற்றில் ஒன்று மூழ்கியது; மற்றொன்று ஓட்டமெடுத்தது. இந்த வெற்றி பெற்ற 'பெங்கால்' ஒரு டச்சு 'டாங்கர்' கப்பலுக்குக் காவலாகப் போய்த் தன் கடமையைச் சரி வர நிறைவேற்றி; அக் கப்பலைப் பாதுகாத்துக் காப்பாற்றியது. 'பெங்காலும்' தனக்குப் பலத்த சேதமோ காயமோ அடையவில்லை. அதிலிருந்தவர்களும் எவ்விதப் பாதகத்திற்கும் ஆளாகவில்லை. இந்த அருஞ் செயலை உலகம் முழுதும் பாராட்டியது. இந்திய கப்பற் படையினரைப் பாராட்டி வரவேற்று பம்பாயில் உபசரித்தது, இந்திய கப்பற் படை சரித்திரத்திலேயே இது தான் முதல் முறை. அந்தக் கப்பற் படையினர் பம்பாய் நகரத் தெருக்கள் வழியே அணி வகுத்துச் சென்றனர். சில வாரங்களுக்குப் பிறகு, பம்பாய் நகரத்தார் அவர்களுக்கு ஒரு விருந்தளித்தார்கள்.

இப்படிப் பட்ட சம்பவம் நாள் தோறும் நேரிடக் கூடியதல்ல. பல வகைத் துறைகளிலும் வேலை செய்ய வேண்டுமென்ற அவர்களுக்குள்ள உணர்ச்சியைத் தான் அது குறிப்பிடுகிறது. 1943-ம் ௵த்தில் "மசாவாவுக்கு அப்பாலும், செங்கடலிலும் பாரசீக வளைகுடாவிலும், 1942-ம் ௵ ஜப்பானியர் தாக்கிய போதும், ஜாவா கடலிலும், இந்த வருஷத்தில் பர்மா கரைக்கு அப்பாலும், மத்தியதரைக் கடலிலும் சிசிலிப் போரிலும், இந்திய கப்பற் படை அருகிலும் போராடி இன்றியமையாததாக விளங்கியிருக்கிறது. சில போராட்டங்களில் கிடைத்த வெற்றிகளில் பங்கு கொண்டன. மற்ற இடங்களில் தாமே முழு வெற்றிக்கும் பொறுப்பாயிருந்தன.

கப்பற் படையினரின் தகுதிகள்

இனியும் பல போராட்டங்கள் ஏற்பட்டு பல வெற்றிகளும் கிடைக்கலாம். ஆனால், இப்போது, அறிவும், ஆபத்துக்களை எதிர்த்துப் போரடக் கூடிய உணர்சசியும் உள்ளவர்கள் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் படையில் சேர வேண்டும். பிரசாரம் மூலம் ஓரளவிற்குத் தான் கப்பற் படையைக் குறித்த விஷயங்களை அறிவிக்கலாம். நேர்முகமான உணர்ச்சியும் ஊக்கமுங் கொண்டால் நல்ல பலனுண்டாகும். இந்தியாவிலுள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் ஒரு மாதத்தில் 15 நிமிஷ நேரம் கப்பற் படையைக் குறித்து விளக்கிக் கூறி விவாதித்தால், அதைப் பற்றிய அறியாமை நீங்கும். பழைய பெருமையும் இன்றையப் பெருமையும் நிலை நாட்டப்படும்.

தூரக் கிழக்கில் கப்பல் போராட்டம் மும்முரமாகிக் கொண்டு வருகிறது. ஜப்பானைக் கப்பல் போரில் வெல்லுவது தான் இந்த யுத்தத்தின் முக்கியமான பிரச்சினை. இப்போது தென்கிழக்காசியப் படைத் தலைமை ஏற்பட்டு விட்டது. இது இனி தரையிலும், ஆகாயத்திலும் கடலிலும் நேரப் போகிற யுத்தத்தைத் தான் தெரிவிக்கிறது. ஆகவே, இந்தியக் கப்பற் படையை பலப்படுத்த வேண்டிய அவசியம் அதிகமாகிறது.

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

நாடுகளிடையே பரபரப்பை உண்டாக்கியிருக்கின்றன. "யுத்தக் குற்றவாளிகளுக்குத் தண்டனை அளிக்கப்படும்" என்ற விஷயம் ரஷ்யாவில் பிரத்தியட்சமாக நிரூபிக்கப்பட்டது. சென்ற உலக மகா யுத்தத்தை ஆரம்பித்த குற்றவாளிகள் தண்டிக்கப் படவில்லை, அகில தேசிய சட்டத்தில் அவர்களைத் தண்டிப்பதற்கு விதிகள் ஏற்படுத்தப் படவில்லை. ஆனால் இந்த யுத்தத்தை ஆரம்பித்த குற்றவாளிகள் தப்பித்துக் கொண்டு உயிர் வாழ முடியாது; மற்றொரு யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு அடிகோல முடியாது. இந்த உண்மையை அறிந்து தான் ஹிட்லரும் அவருடைய சகாக்களும் "நாங்கள் குற்றவாளிகளல்ல" என்ற பிரசாரத்தை இப்போதிருந்தே தொடங்கி விட்டார்கள். ஜனவரி 30-ந் தேதி, ஹிட்லர் செய்த பிரசங்கத்தில், பிரிட்டனையும், அமெரிக்காவையும் யுத்தக் குற்றவாளிகளாகக் காட்டியிருக்கிறார்! ஆனால் இந்த முழுப்பூச்சு மந்திரங்களெல்லாம் ஒன்றுக்கும் பயன்படமாட்டா. அவை அச்சு நாடுகளின் தோல்விக்கு முன் கேட்கும் அழுகைக் குரலோசையே ஒழிய, வேறல்ல.

—(சென்னை அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து பிப்ரவரி 16-ல் ஒலிபரப்பப்பட்ட ஒரு பேச்சு.)

அங்கும், இங்கும்

சரித்திராசிரியர்கள் கழுகுகள் போன்றவர்கள். நல்ல சம்பவங்கள் எங்கு நடந்தாலும் கவனித்துக் குறித்துக் கொண்டு விடுவார்கள். அது பெரிய சம்பவங்களாத்தானிருக்க வேண்டுமென்ற அவசியம் கிடையாது. இப்பொழுது நடக்கும் யுத்தத்திலே எத்தனையோ சம்பவங்கள் நடந்திருக்கின்றன. டங்கர்க் போர்; கிரீட் சம்பவம்; போலந்து மீது ஜெர்மானியர் பாய்ந்து ஈவிரக்கமற்று வார்ஸா நகரை நாசமாக்கியது; லண்டன், ஸவுதாம்டன், காண்டர்பரி போன்ற நகரங்களை ஜெர்மன் விமானிகள் கண்மூடித்தனமாக 1941-ல் த்வம்சப் படுத்தியது; வட ஆபிரிகாவில் நடந்த எல் அலாமின் போர்; அமெரிக்கத் துருப்புகள் வந்திறங்கினது; டோப்ருக் போர்; ஸிஸிலி யுத்தம், இத்தாலி பல்டி; முஸோலினி வீழ்ச்சி; அவரை ஹிட்லரது ஆட்கள் ஒரு தீவிலிருந்து தூக்கிப் போனது; ஜெர்மானிய நகரங்களையும், நீர் பிரதேசத்தையும், பிரமாண்டமான ஜெர்மன் அரண்களையும் நேச தேச விமானிகள் நொறுக்கித் தள்ளி, ஹிட்லரின் யுத்த யந்திரத்தின் வேகத்தைக் குறைத்தது; ருஷ்யப் போர்; ஜப்பானியரின் அக்ரமமான முத்துத் துறைமுகத் தாக்குதல்; சிங்கப்பூர்ப் போர்; பிலிப்பைன்ஸ் யுத்தம்; சமீபத்தில் அமெரிக்கர் செய்த அதிசாகசக் காரியங்கள், அன்ஸியோ கடற்கரையில் நேச தேசப் படைகள் போயிறங்கினது; ஹிட்லரின் நீர் மூழ்கிகளின் அட்டகாசங்கள்; அவற்றின் வாலை அமெரிக்கர்கள் ஒட்ட அறுத்த படலம்—இம்மாதிரி எத்தனையோ சம்பவங்களை அந்தச் சரித்திராசிரியர்கள் குறித்து வைத்திருப்பார்கள். இந்தக் குறிப்புகளிலே, இந்திய வீரர்கள் இந்த மகா யுத்தத்திலே செய்த சேவைகளும் கலந்திருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

வட ஆபிரிக்கப் போரில், இந்தியர்கள் ஜெர்மானியரைப் பல இடங்களில் கதிகலங்க அடித்திருக்கிறார்கள். அவர்களது அடி தாளாது ஜெர்மானியர் வெகு தூரம் பின் வாங்கி ஓடி யிருக்கிறார்கள். இந்த மகா யுத்தத்திலேயே வட ஆபிரிக்கப் போரில் நேச தேசத்தார்க்குக் கிடைத்த வெற்றி மகத்தான வெற்றியாகும். அங்கு மட்டும் இந்த வெற்றி கிடைத்திராவிட்டால், நேச தேசத்தார் பாடு ரொம்ப சிரமமாக இருக்கும்.

மத்தியதரைக் கடலின் முக்கியத்துவம்.

மத்யதரைக் கடலையே உபயோகிக்க முடியாது போய் விட்டதோ இல்லையோ நம்மவர்களுக்கு! வட ஆபிரிக்கப் போரும் முடிந்து, ஸிஸிலியிலும் சுலபமாக வெற்றி கிடைத்து, இத்தாலியிலும் வெகு தூரம் நேச தேசப் படைகள் முன்னேறிச் செல்ல முடிந்ததால் தான், மத்தியதரைக் கடல் பிரதேசம் திரும்பவும் நமது உபயோகத்திற்குக் கிடைத்திருக்கிறது. அது கிடைத்ததால், எவ்வளவோ, சாமான்கள் மேல் நாடுகளிலிருந்து, அதிகக் கால தாமதமின்றி இந்தியாவிற்கு வர முடிந்திருக்கிறது. சைகிள்கள், ரேடியோக்கள், க்ஷவர பிளேடுகள், பத்திரிகைகளுக்கான காகிதம், மருந்து சாமான்கள் எல்லாம் வந்து சேர்ந்திருப்பது எப்படி?

சென்ற மூன்று, நான்கு வருஷங்களாக, எல்லாக் கப்பல்களும் தென் ஆபிரிக்காவைச் சுற்றி வரவேண்டியிருந்தது. மத்யதரைக் கடல் வழியாக அந்த நேரத்தில் ஒரு கப்பல் சீமையிலிருந்து இந்தியா வந்து, சாமான்களைச் சாவதானமாக இறக்கிவிட்டு, சீமைக்குத் திரும்பப் போய்ச் சேர்ந்து விடலாம்.

இந்தியர்கள் சம்பாதித்தது அதிகம்

இத்தகைய சௌகரியத்தை அளித்திருக்கும் வட ஆபிரிக்க வெற்றியிலே இந்தியர்கள் சம்பாதித்துக் கொடுத்தது பெரும் பகுதியாகும். அங்கு மட்டுமில்லை; இப்பொழுது இத்தாலியிலேயும் இந்தியர்கள் ஜெர்மானியருக்கு எமனாக விளங்கி வருகிறார்கள். இதையெல்லாம் அறிந்தே, பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்திய வீரர்களுக்கு மரியாதை செய்ய, வட ஆபிரிக்கப் போரில் பங்கெடுத்துக் கொண்டவர்களில் முக்யமான ஒரு சிலரைச் சீமைக்கு வரவழைத்துப் பெருமைப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அரசரும் அவர்களுக்குப் பேட்டி யளித்து, விருந்து மளித்தார். அவர்கள் சீமையில் பல இடங்களைப் பார்த்துவிட்டு, அங்கங்கே உள்ளவர்கள் அளிக்கும் மரியாதைகளையும் பெற்றுக் கொண்டு வருகிறார்கள்.

இத்தாலியிலே, இந்திய வீரர்களைக் கண்டு ஜெர்மானியர் வெகுவாகப் பயப்படுகிறார்கள் என்ற செய்திகள் அடிக்கடி வந்து கொண்டேயிருக்கின்றன. அதேனய்யா அப்படி என்று கேட்பீர்கள்? கேட்கவேண்டிய கேள்விதானது. ஜெர்மானியருக்கு எதைக் கண்டாலும், பயம் ஏற்படக் கூடாது என்று தானே ஹிட்லர், எல்லா வீரர்களுக்கும் கடும் பயிற்சி அளித்திருக்கிறார். அப்படியிருக்க, அவர்கள் போர்க்களத்துக்கு வந்து சாவுக்கோ, இந்தியர்களுக்கோ பயப்படுவானேன்? என்றும் கேட்கலாம். நியாயமான கேள்வி.

இந்தியர்களுக்கு நாஜிகள் அஞ்சுவதேன்?

ஜெர்மானியர் சாவுக்குப் பயப்படாதிருக்கலாம். ஆனால் இந்திய வீரர்களான கூர்க்கர்களின் துப்பாக்கி முனைகளில் உள்ள சனியன்களையும், அவர்கள் கையாளும் கொடிய, வளைந்த கத்திகளையும் கண்டு அவர்கள் நடுங்கத் தான் நடுங்குகிறார்கள். படாரென்று குண்டு வெடிக்கிறது, சட்டென உயிர் போய் விடுகிறது என்றால் பரவா யில்லையே! இந்தச் சனியன்களும், கத்திகளும் சகிக்க முடியாத நோவை உண்டாக்கி, மனுஷனை குத்துயிராய், வலுவற்றுக் கீழே கிடக்கும்படி செய்து விடும். பின்னால் வரும் படைகளும், லாரிகளும் மிதித்துக் கொண்டு போகும் போது, அந்தக் குற்றுயிர்ப் பிராணிகளுக்குத் தான் எவ்வளவு சுகமாயிருக்கும் என்று யோஜித்துப் பாருங்களேன்! இந்தச் சித்திரவதையை நினைத்ததும் தான் ஜெர்மானியருக்குக் குலை நடுக்கம் ஏற்பட்டு விடுகிறது. கூர்க்கர்கள் சனியன்களைக் காட்டிக் கொண்டு, தங்கள் பாஷா கீதத்தைப் பாடிக் கொண்டு, முன்னால் பாய்வதைக் கண்டதும், அவர்கள் எடுக்கிறார்கள் ஓட்டம்.

இத்தாலியிலே போன வாரம் ஓரிடத்திலே கூட, ஜெர்மன் துருப்புகள் கூப்பிடு தூரத்திலிருந்து, இந்திய வீரர்களை நோக்கி, "ஏய்! ஊருக்குத் திரும்பிப் போங்களேன்!" என்றார்களாம். "ஊருக்குப் போகவா இந்த வழியாக இவ்வளவு தூரம் உங்களைத் துரத்திக் கொண்டு வந்திருக்கிறோம்? உங்கள் உயிரை வாங்கவல்லவா வந்திருக்கிறோம்" என்றார்களாம் இந்திய வீரர்கள்.

இந்தியப் படைகளின் அரிய வேலைகள்

பிரமபுத்திரா நதிதான் பயங்கரமான வேகத்தோடு ஓடும் நதி என்பார்கள். அதன் வேகத்தையும் விட அதிக வேகத்தில் ஓடும் பல நதிகளை இத்தாலியில் இந்திய வீரர்கள் அலக்ஷியமாகக் கடந்து, முன்னணியில் சென்று, வேவு பார்த்து பல அரிய தகவல்களைக் கொணர்ந்து, பிறகு மூலப் படையோடும் கலந்து கொண்டு முன்னேறி யிருக்கிறார்கள். ஒரே இரவில் பல பூதங்கள் மதுரை மீனாக்ஷி அம்மன் கோவில் கோபுரங்களை கட்டின வென்றும், அதற்குள் விடிந்து விட்டதென்றும், ஆகவே வடக்கு கோபுரத்தின் உச்சியைக் கட்டி முடிக்காது ஓடிவிட்டனவென்றும் மதுரைத் தல புராணம் கூறுகிறது. பூதங்களாவது அரைகுறையாக வேலை செய்தன. இந்திய வீரர்களோ, ஒரே இரவில், இத்தாலியில் சில இடங்களிலே பெரிய பாலங்களைக் கட்டி முடித்திருக்கிறார்களாம். அதைக் கண்டு பெரிய மேனாட்டு சேனாதிபதிகளும் பிரமித்திருக்கிறார்களாம்.

இங்கே இந்திய-பர்மிய எல்லையிலே பயங்கரமான போர்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்தப் போரிலே அமெரிக்கர்கள், பிரிட்டிஷார், சீனர்கள், தென்னாப்பிரிக்க சூரர்கள் ஆகியோரோடு இந்தியரும் சரி சமமாக நின்று போராடுகிறார்கள் ரஸ்தாக்களை கண்டோர் பிரமிக்கத் தக்க வேகத்தில் போராடுகிறார்கள். அஞ்சா நெஞ்சு படைத்தவர்கள் என்றால் இந்தியரைத் தான் சொல்ல வேண்டும் என்னும் வகையில் இந்திய வீரர்கள் சண்டை போடுகிறார்கள்.

மாயூ மலைத் தொடர் என்பது இந்திய-பர்மா எல்லையிலிருப்பது. இதன் கிழக்குச் சாரலிலே, ஜப்பானியர் ஒளிந்து

(15-ம் பக்கம் பார்க்க.)

இங்கிலாந்திலிருந்து திரும்பிய இந்தியப் படைகள்

1940-ம் வருஷம் பிரான்சில் நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொள்ளும் பொருட்டுப் போன இந்தியப் படை இந்தியாவிற்குத் திரும்பி வந்து விட்டது.

சென்ற 4 வருஷங்களாக அது வெளிநாடுகளிலிருந்து வந்தது. அது பற்றி மேன்மை தங்கிய பிரதம தளபதி பாராட்டிப் பேசிய போது, "இந்தப் படை தன் பண்டைப் பரம்பரைப் பெருமையை நிலை நாட்டியதோடு, தம் படைக்குரிய தனிச் சிறப்பையும் இந்தியப் படைகளின் தனிச் சிறப்பையும் அதிகப்படுத்தி யிருக்கிறது" என்று குறிப்பிட்டார். ஒரு இந்தியத் துறைமுகத்தில் இப்போது வந்திறங்கியிருப்பவர்கள் 'ராயல் இந்தியன் ஆர்மி சேர்விஸ்' படையைச் சேர்ந்தவர்கள்; முக்கியமாகக் குதிரை வண்டிப் படையைச் சேர்ந்தவர்கள். இவர்களுள் மனித வைத்தியப் படையையும் மிருக வைத்தியப் படையையும் சேர்ந்தவர்களு மிருக்கிறார்கள்.

யுத்த ஆரம்ப காலத்தில் இந்தியாவிலிருந்து, பிரிட்டிஷ் படைகளுக்கு பிரான்சில் உதவி செய்யும் பொருட்டு, குதிரை வண்டிப் படை யனுப்பும்படியாகக் கட்டளை பிறந்தது இதற்கென்று சில படையினர் பொறுக்கி எடுக்கப்பட்டு, தம் குதிரைகளோடு அனுப்பப்பட்டனர். இவர்கள் போர் அரங்கம் போய்ச் சேர்ந்தார்கள். பிறகு, இந்தப் படையினர், பிரான்சின் வீழ்ச்சிக்கு முன்பு நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டனர். பிறகு நிகழ்ந்த சம்பவங்களின் பயனாக, அவர்களில் பலர், இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டனர். சிலர் டன்கர்க்குக்கும், மற்றவர்கள் வேறு பல இடங்களுக்கும் அனுப்பப்பட்டனர். மேஜர் ஹிச்காக் தலைமைக்குட்பட்ட படை, ஜெர்மானியர்களால் துரதிர்ஷ்ட வசமாய்க் கைதி செய்யப்பட்டது. அந்த இந்திய சிப்பாய்களிட மிருந்து வரும் கடிதங்களிலிருந்து அவர்களுடைய உணர்ச்சி குன்றாதிருக்கிற தென்று தெரிகிறது. பிரான்சிலிருந்து கப்பலேற்றப்பட்ட இந்தியப் படையினர் இங்கிலாந்தில் ஒரு துறைமுகத்தில் இறக்கப்பட்ட உடனே, அணிவகுத்து வெகு சுறுசுறுப்பாக நடந்து சென்றார்கள். அந்தக் காட்சியைக் கண்டவர்களுடைய மனதில் அவர்களுடைய இராணுவ ஒழுங்கு முறை பற்றி மிகவும் உயர்வான அபிப்பிராயந் தான் தோன்றி யிருந்தது. இந்தப் படையினர், மகா கடுமையான கஷ்டங்களுக்கு உள்ளான போதுங் கூட, தம் இராணுவ ஒழுங்கு முறையினின்று நழுவியதே கிடையாது என்னும் சிறந்த புகழ் பெற்றனர். இங்கிலாந்தில் இந்தப் படை திருத்தி யமைக்கப்பட்டது. அதன் தேவைப் பொருட்களும் திருத்தி யமைக்கப்பட்டன. இங்கிலாந்தின் இந்தியப் படையாக அது மாறியது. இங்கிலாந்தைப் பாதுகாக்கவும், மீண்டும் ஐரோப்பாவைத் தாக்க நேர்ந்தால், அதற்குக் குதிரை வண்டி படையைத் தயார் செய்து நடத்திப் போகவும் ஆயத்தம் செய்து கொண்டிருந்தது. அல்லாமலும், திருத்தியமைக்கப்பட்ட இங்கிலாந்துப் படைகளுக்கு குதிரை வண்டிப் படையினர் செய்ய வேண்டிய வேலையைக் குறித்தும், கற்றுக் கொடுத்தது.

இந்தப் படை சமீபத்தில் இந்தியத் துறைமுகம் ஒன்றிற்கு வந்து சேர்ந்தது. அப்போது பிரிட்டிஷ் படை யொன்று அதை வரவேற்று இராணுவ சங்கீதம் வாசித்தது. மேன்மை தங்கிய பிரதம படைத் தலைவர் சார்பாக, மேஜர் ஜெனரல் அல்பன் சி.பி.இ., டி.எஸ்.ஓ. ஏ.டி.சி. அக்கப்பலின் மேல் ஏறினர். அவருடன், இந்திய பிரதம படைக் காரியாலயத்தைச் சேர்ந்த சப்ளை டிரான்ஸ்போர்ட் டைரக்டர் மேஜர் ஜெனரல் ஜி. டபுள்யு. ஹாட்ஜன் சார்பாக, பிரிகேடியர் ஆர். ஐ. ஜோன்ஸும் கூடச் சென்றார். அந்தக் கப்பற் படையின் உத்தியோகஸ்தர்களும் சிப்பாய்களும் கூடி யிருக்கும் போது, மேன்மை தங்கிய இந்தியப் படைத் தலைவர் அவர்களுக்கு அனுப்பியுள்ள கீழ்க்கண்ட செய்தியை மேஜர் ஜெனரல் அல்பன் வாசித்தார்:—

"இந்தியாவுக்குத் திரும்பி வரும் உங்களை வரவேற்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். உங்களில் பலர் 1939-ம் வருஷம் இந்தியாவினின்று கிளம்பினீர்கள். பிரான்சில் நடைபெற்ற போராட்டத்திலும், டன்கர்க்கை விட்டுக் காலி செய்வதிலும் பங்கு கொண்டீர்கள். அப்போது உங்கள் தோழர்களான 22-ம் நம்பர் குதிரை வண்டிப் படையினர் துரதிர்ஷ்ட வசமாக எதிரிகளால் கைதி செய்யப்பட்டார்கள். இன்னமும் யுத்தக் கைதிகளாகத் தானிருக்கிறார்கள். அவர்களிட மிருந்து வரும் கடிதங்களிலிருந்து, அவர்கள் நல்லெண்ணத்தோ டிருக்கிறார்களென்று தெரிகிறது. மீண்டும் தாம் விடுதலை யடையும் நாள் எதுவோவென்று ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்."

"உங்களில் மற்றவர்கள் இங்கிலாந்திற்குப் போய் மூன்று வருஷங்களுக்கு மேல் ஆகிறது. நீங்கள் அனைவரும் உங்கள் பழம் பெருமையை மிகச் சிறந்த முறையில் காப்பாற்றினீர்கள். உங்களுடைய சொந்தப் படையின் புகழை மட்டுமன்றி இந்தியப் படைகளின் பெருமையையே நீங்கள் வெகுவாக உயர்த்தி யிருக்கிறீர்கள். இங்கிலாந்திலும், வேல்சிலும், ஸ்காட்லந்திலும் உங்களுக்குப் பல நண்பர்கள் ஏற்பட்டிருப்பார்கள். அவர்கள் உங்களை நெடு நாட்கள் வரை மறக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

"ஜப்பானை அடியோடு முறியடிக்கிற வரை, யுத்தம் முடியாது. நன்றாக உழைத்து இப்போது லீவில் வந்திருக்கிற நீங்கள், உங்கள் லீவ் முடிந்த பிறகு, இப்போது போர் முனையிலிருந்து போராடும் உங்கள் தோழர்களோடு நீங்களும் சேர்ந்திருந்து, போராட வேண்டி வரும்."

மேஜர் ஜெனரல் ஹாட்ஸன் சார்பாக பிரிகேடியர் ஆர். ஐ. ஜோன்ஸ் கொண்டு வந்த தோர் செய்தியில், 'இந்தியன் ஆர்மி சேர்விஸ்' படையின் சார்பாக வரவேற்றுக் கூறியதாவது:—

"எங்களிடையே நீங்கள் மீண்டும் வந்து சேருவது பற்றி, பெருமித மடைகிறோம். பிரான்சிலும், யுத்த ஆரம்ப காலத்திலும், பிறகு இங்கிலாந்திலும் இந்தியப் படைகளின் சார்பாகப் போராடும் பெருமை நமக்கு வாய்த்தது நமது அதிர்ஷ்டமே."

இந்தச் சடங்குகளெல்லாம் நிறைவேறிய பிறகு, வெகுமதிகள், மிட்டாய், பழங்கள், சிகரெட்டுகள் முதலியன படையினருக்கு வழங்கப்பட்டன. இவை லேடி கவாஸ்ஜி ஜிஹாங்கீர் தலைமையில் இந்தியத் துருப்புக் கான்டீனால் வழங்கப்பட்டன. இந்தக் கான்டீனால் இந்தப் படையினரை வரவேற்று உபசரிக்க, லேடி ஜிஹாங்கீர் எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்திருந்தார்.

சென்னை காலாட்படை

"இந்தப் படைகளைக் குறித்து எப்படிப் புகழ்ந்து எழுதுவ தென்று எனக்குத் தெறியவில்லை. மகா ஆச்சரியப் படும்படியாக அவர்கள் நடந்து கொண்டார்கள்; அந்தச் சிப்பாய்கள் என்னைத் திகைக்கச் செய்து விட்டார்கள்" என்று சர் ஆர்தர் வெல்லெஸ்லியாயிருந்து, பிறகு வெல்லிங்டன் பிரபு என்னும் பட்டம் பெற்றவர், தென்னிந்திய போராட்டம் முடிந்த பிறகு, குறிப்பிட்டார். அந்தப் புகழை, சென்னைக் காலாட் படை பட்டாளம் மீண்டும் படிப்படியாக அடைந்து கொண்டு வருகிறது என்னும் விஷயம், உங்களில் பலருக்குத் தெரியாதிருக்கலாம்.

சென்னைப் பட்டாளத்தைச் சேர்ந்தவர்கள் பர்மாவில் ஜப்பானியப் படைகளோடு போராடி, தமக்குச் சேதமே நேராதபடி எதிரிகளுக்குப் பெரும் நஷ்டத்தை யுண்டாக்கி விட்டார்கள். சந்தர்ப்பங்கள் மட்டும் கிடைத்தால், சென்னை சாப்பர்ஸ் அன் மைனர்ஸ் போலவும் சென்னை பீரங்கிப் படையினரைப் போலவும் சென்னைக் காலாட் படையினரும் பல அருஞ் செயல்களாற்றுவார்கள் என்பது பற்றி சந்தேகமே கிடையாது. மற்ற எல்லாத் துறைகளிலு மிருக்கும் எந்தப் படைக்கும் சென்னைக் காலாட் படை சளைத்த தல்ல என்பதை மீண்டும் மெய்ப்பித்து விடுவார்கள்.

சென்னைப் படையில் பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்

இராணுவ வாழ்க்கையின் இனிமைகள்

தம் பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களிடம் இந்தியப் படைகள் பெரிதும் நம்பிக்கை யுடையவர்கள் என்பது உலகறிந்த விஷயம். படைப் பெருமைகளில் இது ஒரு முக்கியமான அம்சம். இந்தக் கட்டுரையை ஆங்கிலத்தில் எழுதியவர், ஒரு பிரிட்டிஷ் இராணுவ உத்தியோகஸ்தர். முதலில் பிரிட்டிஷ் படைகளோடும், பிறகு பஞ்சாபிப் படைகளோடும் பயிற்சி பெற்றவர். இப்போது சென்னைப் படைகளோ டிருக்கிறார். இவர்களுடைய மதம், வழக்க பழக்கங்கள், உணவு வகை முதலிய அனைத்தும் அவருக்கு மாறுபட்டவை. அதனால் தான், மனதார்ந்த நம்பிக்கை அவ்வளவு எளிதில் உடனே ஏற்பட்டது.

சதுரமான மணல் வெளி. சுற்றிலும் சிறு குடிசைகள். ஒரு பெரிய ஆலமரம். அந்த மரத்தடியில் தான் அனைவரும் கூடுவது வழக்கம். அநேக சென்னை சிப்பாய்கள் அங்கே யிருந்தார்கள். நான் அவர்களைப் பார்த்தேன். அவர்களும் என்னைப் பார்த்தார்கள். அவர்கள் நம்பத் தக்கவர்கள் தானா? அவர்களுடைய குணம் எப்படியோ? என்றெல்லாம் நான் சந்தேகங் கொண்டேன். அவர்களும் என்னைப் போலவே சந்தேகங் கொண்டிருக்கத் தான் செய்வார்கள். ஆனால் அவர்களுடைய பயிற்சியும் திறமையும் நற்குணமும் வெகு விரைவில் எனக்குப் புலனாயின. என்னைப் பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்களென்று நான் எப்படி நிச்சயமாகச் சொல்லக் கூடும்? என்றாலும் அவர்களிடம் நான் ஆசை கொள்ளுகிறேன்.

ஒவ்வொரு நாளும் மாலை வேளையில் அடுத்திருக்கும் ஆற்றில் போய் நீந்துவது வழக்கம். மழை காரணமாகத் தண்ணீர் கலங்கலா யிருந்தது. என்றாலும் நாங்கள் கொஞ்சமும் பின் வாங்குவதில்லை. ஆனால், அவர்கள் அனைவரையும் தண்ணீரை விட்டு வெளி யேற்றுவது தான் எனக்குக் கொஞ்சம் கஷ்டமா யிருந்தது. விளையாட்டுகளிலும் வேடிக்கைகளிலும் சென்னை சிப்பாய்களுக்கு மிகவும் ஆசை. படையிலிருப்பவர்களுக்கு, இது முக்கியமாக இருக்க வேண்டிய குணம்.

உடற் பயிற்சி

நாங்கள் உடற் பயிற்சிகள் செய்யும் போது, ஒருவன் ஒவ்வொரு முறையும் தலை கீழாக வந்து விழுவது வழக்கம். அப்போது அனைவரும் சிரிப்பார்கள். என்றாலும், அவன் தன் முயற்சியைக் கைவிடவில்லை. இதைப் பார்த்த நான், அவனுடைய பிடிவாதத் தன்மையைப் பெரிதும் பாராட்டினேன். எல்லோரும் அவனைப் போலவே பிடிவாத குணமுடையவர்கள் தான் என்று நினைத்தேன். நாளடைவில் நான் எண்ணியது முற்றும் உண்மை என்பதைக் கண்டேன்.

ஒரு நாள் நாங்கள் கால் பந்தாட்டக் கோஷ்டியொன்றை யமைத்து, அந்த ஊரிலுள்ள போலீஸ் கோஷ்டியோடு போட்டியிட்டு விளையாடினோம். அவர்கள் எங்களை விட நன்றாகப் பழகியவர்கள்; கெட்டிக்காரர்கள். எனவே, எங்களை எளிதில் வென்று விட்டார்கள். மறு முறையும் ஆடினோம். அப்போது சமமானோம். அதே யிடத்தில் மூன்றும் முறை ஆடி அவர்களை வெல்ல வேண்டு மென்னும் உறுதியோடிருந்தோம். துரதிஷ்டம் குறுக்கிட்டது. நாங்கள் வேறிடத்திற்குப் போக வேண்டி நேரிட்டது.

எங்கள் பட்டாளத்தில் ஒரு ரேடியோ இருந்தது. அப்போது, அது எமக்குப் பெருங் களிப்பூட்டியது. பலர் அதைச் சுற்றி அரை வட்டமாக உட்கார்ந்து கொண்டு மணிக் கணக்காகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அது கொஞ்சமும் சகிக்க முடியாதது என்று நான் நினைத்தேன். ஆனால், அவர்கள் அதை மிகவும் ஆசையோடு கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

காரியாலயத்தில் தமாஷ்கள்

எங்கள் காரியாலயத் தோற்றமே, சற்று கடுமையா யிருக்கும். அங்கேயுங் கூட, சில சமயங்களில் வேடிக்கையான சம்பவங்கள் நிகழுவதுண்டு. ஒருவனுடைய இரண்டு மனைவிகளும், குடும்பத்திற்கு அனுப்பப்படும் தொகை முழுவதையும் தனக்கே கொடுத்துவிட வேண்டு மென்று மனுக் கொடுத்தனர். ஒருத்திக்குப் பணத்தையும் மற்றொருத்திக்கு நிலத்தையும் அவன் கொடுத்தான். "மனைவிக்கு ஆபத்து; உடனே புறப்படவும்" என்று தந்திகள் வரும். நான் உடலில் பெரியவன்; ஆகவே, எனக்கு அதிகப்படி உணவு வேண்டும் என்று ஒருவன் கூறுவான். விடுமுறை கொடுப்பது மிகவும் சிக்கலானதோர் பிரச்சினையா யிருந்தது. இப்போது அந்த நிலைமை மாறிவிட்டது. அநேகருக்கு 'காஷுயல்' லீவும் யுத்த லீவும் கிடைக்கின்றன.

சில சமயங்களில் பாட்டுக் கச்சேரிகள் நடைபெறும். இது முன்னேற்பாட்டுடனும், திடீரென்றும் ஏற்பாடாவ துண்டு. ஹார்மோனியமும் அதை வாசிக்கக் கூடியவர்களும் கிடைத்துவிட்டால், திடீரென்று பாட்டுக் கச்சேரிகள் ஏற்பாடாகிவிடும். கச்சேரி ஆரம்பத்தில் சுவாரஸ்யமில்லாமல் தானிருக்கும். ஆனால் போகப போக, உற்சாகம் பெருகிவிடும். ஹார்மோனியம் வாசிக்கிறவருக் கெதிரில் அனைவரும் வளைவாக உட்கார்ந்து கொள்ளுவார்கள். பாட்டுக்கள் பலவகைப்பட்டவை. அவை பாடப்படும் போது, அனைவரும் கைகளைக் கொட்டித் தாளம் போடுவார்கள். நடை முறைச் சிந்துகளும் பாடப் படுவதுண்டு, இந்தப் பாட்டுக்களும் பிரிட்டிஷ் நடை முறைப் பாட்டுக்களைப் போலவே, தாளந் தவறாது நன்றாக அமைக்கப்பட்டிருக்கின்றன. நல்ல இராகங்களு மிருக்கின்றன. அவற்றை நான் எளிதில் கற்றுக் கொண்டேன். படைகள் அணிவகுத்து நடந்து போகும் போது, ஒரு தலைவர் ஒரு வரியைப் பாட, அனைவரும் சேர்த்து அதை அடுத்துப் பாடுகிறார்கள். இவ்வாறு ஒவ்வொரு வரியாக அவர்கள் பாட்டுக்களை யெல்லாம் கற்றுக் கொள்ளுகிறார்கள். இவற்றை நான் மறக்கவே முடியாது.

மொழிப் பிரச்சினை பிரமாதமில்லை

அவர்களுக்குள் மொழிப் பிரச்சினை ஒரு பிரமாதமல்ல. அவர்கள் அனைவருக்கும் உருது சொல்லிக் கொடுக்கப்படுகிறது. அவர்கள் ஒரே மொழி பேசாதவர்களா யிருந்தால், அவர்களெல்லாம் உருதுவில் பேசிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் அனைவரும் உருது தெளிவாகப் பேசினார்களென்று நான் சொல்லமாட்டேன். என்றாலும் உருதுமொழி வாயிலாகத் தம் கருத்தைத் தெரிவிக்கவும், பிறர் கூறுவதைத் தெரிந்து கொள்ளவும் இயலும். இவர்களில் பெரும்பாலோர் படையில் சேரு முன்பு, உருது மொழியின் ஒரு வார்த்தை கூடத் தெரியாதவர்கள். யுத்தத்திற்குப் பிறகு, அது மிகவும் உபயோகமா யிருக்கு மென்று இப்போது அவர்களுக்குத் தெரியும்.

யுத்தத்திற்குப் பிறகு, தான் என்ன செய்ய வேண்டு மென்பது பற்றி, சென்னை சிப்பாய்களின் எண்ணங்க ளெல்லாம் மிகவும் சாதாரணமானவையாகத் தானிருக்கின்றன. அவனுக்கு வேண்டியதெல்லாம் ஒரு வீடும் கொஞ்சம் நிலமும் தன் பெற்றோர்களுக்கு அருகில் இருக்க வேண்டும். தன் மனைவி மக்களொடு அந்த வீட்டில் வசித்துக் கொண்டு, நிலத்தைப் பயிரிட்டு தன் குடும்பத்தோடு காலங்கழிப்பதுடன், தன் பெற்றோருக்கும் உதவியா யிருக்க வேண்டு மென்பது தான், அவன் ஆசை. படையில் சேர்ந்த பிறகு, அநேக புதிய விஷயங்களை அவன் தெரிந்து கொண்டிருக்கிறான். தன் கிராமத்தில் பல வகை முன்னேற்றங்கள் செயவதற்கு இடமுண்டு என்று ஒப்புக் கொள்ளுகிறான். ஆனால், அவற்றை எப்படி சாதிப்பது என்றோ, அல்லது தான் புதிதாக அடைந்துள்ள திறமையை அங்கே எப்படிப் பயன்படுத்துவது என்றோ, அவனுக்குத் தெரியவில்லை. யுத்தத்திற்குப் பிறகு நடைபெற வேண்டிய புனர் நிர்மாண வேலையைக் குறித்து ஜமேதார் செய்த பிரசங்கங்களைக் கேட்டிருக்கிறான்; ஆனால், அவை தான் சாதிக்க முடியாதவை என்று நினைக்கிறான்.

காட்டுப் பயிற்சியிலும் களிப்பு

நாங்கள் பயிற்சி பெறும் பொருட்டுக் காட்டிற்குப் போனோம். நேரடியாக அந்த வாழ்க்கை முறையை மேற்கொண்டோம். சிலர் அவ் வாழ்க்கையைப் பெரும் இன்பமாகக் கருதினார்கள். அவர்கள், எந்தெந்த மரத்தை எப்படி வெட்ட வேண்டு மென்றும், எந்த வகையில் பயன்படுத்த வேண்டு மென்றும் காட்டுக் காய்கறிகள் எங்கே கிடைக்கு மென்றும், ஒரு குடிசைக்கு, ஒழுகாதபடி எப்படிக் கூரை வேய வேண்டு மென்றும் மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தார்கள். அப்போது மீண்டும் நான் பயிற்சியாளனா யிருப்பதாகவே நினைத்தேன்.

உணவைப் பற்றிய பிரச்சினையே படையில் சேர்ந்துள்ள சென்னை வாசிகளுக்குக் கிடையாது. ஏனென்றால், அவர்கள் தம் சொந்த வீடுகளில் உண்டு வந்ததைவிட, அதிகமாகவே பொருட்கள் வழங்கப்படுகின்றன. உணவு வகைகளும் அதிகம். அவர்களுக்கு முதலில் கோதுமை மா (ஆட்டா) வழங்கப்பட்ட போது, பெரிதும் அதிருப்தி கொண்டார்கள்; ஆனால், கொஞ்ச நாட்களுக்குப் பிறகு, அதைப் பெரிதும் விரும்பி யுண்ண ஆரம்பித்து விட்டார்கள். ஒரு சமயம் கோதுமை மா கொடுப்பது தற்செயலாகத் தவறிவிட்டது. அப்போது அவர்கள் தம் அரிசி உணவை இழக்க மனமில்லா விட்டாலும், கோதுமை மாவும் கட்டாயம் வழங்கப்பட வேண்டு மென்று கோரினார்கள். அவர்கள் உண்ணும் எல்லா வகை உணவுகளையும் நான் உண்டு பார்த்திருக்கிறேன். அவற்றை நான் பெரிதும் விரும்புகிறேன். அந்தக் கறி மிகவும் காரமா யிருந்தது.

எங்களில் 100-க்கு 90 பேர்களுக்கு நீந்தத் தெரியும். மற்றவர்களும் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். கூலிப் படகுகள் ஆற்றில் மிதந்து கொண்டு வரும் போது, படையைச் சேர்ந்த அனைவரும் அதைப் போய்ச் சூழ்ந்து கொள்ளுவார்கள். அதில் ஏறித் தண்ணீரில் குதிப்பார்கள். மூழ்கி ஆட்டங் காட்டுவார்கள். அந்தப் படகுக்காரர்களோடு தமாஷாகப் பேசிக் களிப்பார்கள். ஒருவன் படகைத் தள்ளும் மூங்கிலை தண்ணீருக்குள் மணலில் ஊன்றி படகைத் தள்ளினான். அப்போது அந்த மூங்கில் முறிந்து தடாரென்று தண்ணீரில் விழுந்தான்.

அங்கிருந்த எங்களுக்கு உலக சம்பந்தமான பல வகைத் தொல்லைகள் இருக்கத் தான் செய்தன; என்றாலும், எங்கள் கூட்டம் மகிழ்ச்சியோடே தான் இருந்த தென்று பொதுவாகக் கூற வேண்டும். ஒரு பெரிய கஷ்டமென்ன வென்றால், நாங்கள் வேலை செய்ய வேண்டும்.

படையினரின் குண நலங்கள்

எங்கள் படையிலிருப்பவர்களுடைய குண நலங்களைக் குறித்துக் கூறுவோம். சுபேதார் சாஹிப் ஒரு தந்திரக்காரக் கிழவர். என்னைப் போல் இரண்டு மடங்கு வயதும் சர்விசும் உடையவர். புதிய முன்னேற்றங்களைக் குறித்து மட்டுந் தான் அவருக்கு நான் கற்றுக் கொடுக்க வேண்டும். அந்தப் படையைக் குறித்து நான் தெரிந்து கொண்டிருப்பதை விட பல அதிக நுட்பங்களை அவர் தெரிந்து கொண்டிருக்கிறார். அவர் போய் விட்டால், எனக்கொரு கை போனது போலத் தான். அவர் கிழவராயிருந்த போதிலும், ஒரு போதும் பின் வாங்கியதே கிடையாது. ஜமேதார்களில் ஒருவர் இளைஞர்; கொஞ்சங் கொர்வியுங் கூட; முன்கோபி. ஒரு படைத் தலைவருக்கு இருக்க வேண்டிய எல்லாக் குணங்களும் அவரிடமிருந்தன. தான் எண்ணியபடி எக்காரியத்தையும் சாதித்துக் கொள்ளுவார். மாகாண அரசாங்க சம்பந்தமாக அவர் கூறுபவற்றைக் கேட்கும் எந்தத் தாசில்தாரும், உண்மையிலேயே வெட்கமடையவேண்டும். இன்னொரு ஜமேதார் சற்று அமைதியான தோற்ற முடையவர். அவர் மிகவும் அடக்க முடையவர். அவர் எந்த அளவிற்குக் கற்றவரென்று யாரும் தெரிந்து கொள்ள முடியாது. இவருக்கு நல்ல சாரீரமுண்டு; வழி நடைச் சிந்துவை வெகு தெளிவாகப் பாடித் தன் படையை நடத்திக் கொண்டு போவார். ஒவ்வொருவரைப் பற்றியும் நான் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. ஆனால் தெருப் பெருக்குவோனைக் குறித்து மட்டும் குறிப்பிடுகிறேன். அவன் நாளெல்லாம் கவலைப் பட்டுக் கொண்டே அலைகிறான். சுறு சுறுப்பாகவு மிருக்கிறான். ஆனால், அவனைப் பற்றி கவலைப் படுவார் எவருங் கிடையாது. கடைசியாக எங்கள் படை இடம் மாறிய போது, எங்களைப் போலவே நெடுந் தூரம் நடந்து வந்து ஆற்றையுங் கூட, அவன் நீந்திக் கடந்தான்.

வாசக வட்டாரங்கள் (Reading Circles)

ரீடிங் ஸர்க்கிள்கள் என்பது துரைத்தனத்தாரால் வெளியிடப்படும் "யுத்த சஞ்சிகையை" வாரத்திற்கொரு முறை, பொது ஜனங்களைக் கூட்டுவித்து வாசிக்கும் ஸ்தாபனங்களாகும். அதாவது யுத்தத்தைப்பற்றிய உண்மையான செய்தியைப் பரப்புவதாகும். இந்த வேலையை முன்பு கிராமங்களில் கிராம முனிசிபுகளும் மற்றைய இடங்களில் இதர சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் நடத்தி வந்தார்கள். இப்பொழுது சில காலமாக மேற்கண்ட ஸ்தாபனங்களை ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களிடம் ஒப்படைத்திருக்கின்றார்கள். ஏனெனில் எல்லா இடங்களிலும் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களே பொது ஜனங்களுடன் நெருங்கிப் பழகி, அவர்களுடைய நன்மதிப்பிற்கு பாத்திரர்களாகி யிருக்கின்றார்களென்ற நம்பிக்கை. ஆதலினால் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களை வாசக வட்டாரங்களை நடத்துவதற்கு முக்கிய பொறுப்பாளிகளாக்கி, யுத்தப் பிரசார வேலை வெற்றிகாமாக நடந்தேறுமென்று பரிபூரணமாக அரசாங்கத்தார் நம்பியிருக்கின்றார்கள். ஆனபடியினால் ஒவ்வொரு ஆரம்பப் பாடசாலை ஆசிரியரும், அவர்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாகி, மேன் மேலும் வாசக வட்டாரங்களை வெற்றிகரமாய் நடத்துவது கடமையாகும்.

பொதுப்பயன்.—இம்மாதிரியான வாசக வட்டாரங்கள் நடத்துபவர்களுக்கும், அதில் கலந்து கொள்கின்றவர்களுக்கும் உலக ஞானம் அதிகம் ஏற்படுகின்றது. இதற்கு முன்பு பொதுவான ரீதியிலேயே உலகத்தைப்பற்றிய பூகோளப் பாடங்களிலும், இதர பாடங்களிலும், பாட திட்டங்களின்படி பற்பல முக்கியமான விஷயங்களைத் தான் தெரிந்து கொண்டிருப்பார்கள். ஆனால் இப்பொழுது யுத்தங் காரணமாக, உலகத்தில் பற்பல பாகங்களிலுமுள்ள, மிகச்சிறிய இடங்களையும், அதன் சீதோஷ்ணஸ்திதி, விஸ்தீரணம், போக்கு வரவு முதலானவைகள் யாவும் தெரிந்து கொள்வதற்கு வசதி ஏற்பட்டிருக்கிறது. முற்காலத்தில் உலக ஞானம் கொள்ளும் பொருட்டு "சுற்றுப் பிரயாணத்தை" மானிட வாழ்க்கையின் முக்கிய அம்சமாகக் கருதி அதற்காகப் பெருங் காலஞ் செலவழித்து சுற்றுப் பிரயாணஞ் செய்து, தாங்கள் கண்டதற்கும், கேட்டதற்கும் தகுந்தபடி, தங்கள் வாழ்க்கையைத் திருத்திக் கொள்வார்கள். ஆனால் முற்காலத்தில் நேரில் கண்டாலொழிய மற்றப்படி, உலக ஞானத்தை யாவரும் எளிதில் கொள்வதற்குத் தக்கவாறு, பத்திரிகைகளோ சஞ்சிகைகளோ அடிக்கடி வெளிவருவதில்லை. இப்பொழுது அரசாங்கத்தார் யுத்த சஞ்சிகைகளின் மூலம் வாரத்திற்கொருமுறை உண்மையான உலக ஞானத்தை யளித்து வருகிறார்கள். இவ்வரிய சந்தர்ப்பத்தைக் கைவிடாது, பொது ஜனங்களனைவரும், வாசக வட்டாரங்களுக்கு தவறாது விஜயஞ்செய்து, யுத்தப்பிரசாரத்தி லீடுபட்டு பயனடைந்து கொள்ள வேண்டும். நாமாக நம்முடைய சொந்தப் பொறுப்பில் இவ்விதப் பயனை நாமடைய வேண்டுமென்றால், சாத்தியமில்லை யென்பது அறிவுள்ள ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்த்தால், தெரியவரும். எதையும் அலக்ஷியம் செய்வ தென்ற கால இயற்கையைக் கைவிடவேண்டும்.

குறித்த பயன்.—வாசக வட்டாரங்களை நடத்துகின்றவர்களுக்கு காலக்கிரமத்தில், அறிவும் அனுபவமும் ஏற்படுமென்பது எனது நம்பிக்கை. இதைக் கிரமமாக நடத்துவதன் மூலம், வாரமொரு முறை, பொது ஜனங்களும் ஆசிரியர்களும் சந்தித்து குசலப்ரஸ்னம் செய்து கொள்ள நேரிடும். அதன் மூலம் அதிகத் தொடர்பு ஏற்படும். இதற்கு முன் பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தொடர்பு, ஏற்படக்கூடிய "பெற்றோர் சங்கம்" முதலான சாதனங்கள் தானிருந்தன. இப்பொழுது "வாசக வட்டாரங்களின்" மூலம் எல்லாப் பொது ஜனங்களின் நல்லுறவு ஏற்படுவதினால் ஆரம்பாசிரியர்களின் மதிப்பு இன்னும் அதிகமாய் உயரும். கடந்த செப்டம்பர் மாதம் பாளையங்கோட்டையில் நடந்த திருநெல்வேலி ஜில்லா கல்வியாளர்களின் இரண்டாவது யுத்தப் பிரசார மகா நாட்டில் நிறைவேறிய 6-வது தீர்மானத்தின் மூலம், வாசக வட்டாரங்களைத் திறமையாக நடத்தியதற்காக ஆரம்பாசிரியர்களுக்கு நன்றி செலுத்தி யிருப்பதே போதிய சான்றாகும்.

சுயநலமின்மை.—வாசக வட்டாரங்களை நடத்துவதை மிகவும் கௌரவமான வேலையாகவே கருதவேண்டும். இதற்கென்று தனியான பிரதிப்பிரயோஜனத்தைக் கருதுதல் கூடாது. குறுகிய மனப்பான்மையை விட்டு விசாலமான நோக்கங் கொள்ள வேண்டும். எந்த வேலையை நடத்தினாலும், நீடித்த நற்பெயர் தொனிக்கும்படியாக உலகோரின் மெச்சுதலுக்கு ஆளாக வேண்டும். அ∴தில்லையேல், எவ்விதப் பிரயோஜனமும் கிடையாது. இதுவே நம் நாட்டு சரித்திரத்தில் பரம்பரையாக பெரியோர்களுடைய அனுபவம். காரிய வெற்றிக்கும் சுய நலத்திற்கும் முற்றிலும் விரோதமாகும். "நிஷ்காம்யார்த்தமாகவே" எதையும் செய்யென்று கீதையில் பகவான் உபதேசிக்கிறார். பிறர் எப்பொழுது கைம்மாறு செய்வார்களோ வென்று நினைத்துகொண்டு காரியஞ் செய்யாதே யென்பது நீதி வாக்கியம். இதனுடைய தாத்பர்யமென்னவென்றால், அவனவன் செய்த நற்காரியங்களுக்குத் தகுந்தபடி நற்பயன் கிடைக்குமென்பது தான். ஆகையால் யுத்தப் பிரசார வாசக வட்டாரங்களை நிர்வகித்துச் சரிவர நடத்திவர வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

கடமையெனக் கொள்ளல்.—அதிகாரிகளின் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிந்து இதை நடத்துகின்றோமென்ற எண்ணத்தை யறவே விட்டொழிக்க வேண்டும். ஒவ்வொருவரும் இதை நடத்துவது தங்கள் கடமையெனக் கொள்ளல் வேண்டும். சாதாரணமாக குடும்ப விவகாரங்களைப் போன்றதே தான் அரசாங்க விவகாரமும் என்று யாவரும் அறிந்த விஷயம். மனதில் இயற்கையாக ஏதாவது தோன்றினாலும், குடும்பத்தைப் பற்றிய கடமைகளையும் பலன்களையும் அடிக்கடி ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும். நாளடைவில் அவ்வித மனப் பான்மை நீங்கி விடும். அரசாங்கத்தாரும் யுத்த சம்பந்தமாகப் பொது ஜனங்களிடம் கால, தேச, வர்த்தமானத்தை யனுசரித்து, அவரவர்கள் சக்திக்குத் தகுந்தபடி தான் உதவியைக் கோருகின்றார்கள் என்பது வெளிப்படையாய் எல்லோரும் அறிந்த விஷயமே. ஆரம்பாசிரியர்களிடம் இந்த பிரசார வேலையை அரசாங்கத்தார் எதிர்பார்ப்பது முற்றிலும் நியாயமே. ஆகையால் ஆரம்பாசிரியர்கள் காலத்தையும், நிலைமையையும் ஆராய்ந்து அதற்குத் தக்கவாறு இவ்விஷயத்தில் நியாய புத்தியுடன் நடந்து கொள்வது மிகவும் நலந்தரும் செயலாகும்.

கூட்டம் கூட்டுதல்.—கூட்டம் கூட்டும் சந்தர்ப்பத்தைக் குறிப்பது தான் அதிக சாமார்த்தியமாகும். வாரத்திற் கொரு முறை கூட்டவேண்டுமென்றிருந்தாலும் பொது ஜனங்களை அதிகமாகக் கூட்டுவது தான் லக்ஷியமே யொழிய, குறிப்பிட்ட தினம் லக்ஷியமல்ல. இவ்விஷயந்தான் வாசக வட்டாரங்களின் பலனுக்கு அஸ்திவாரமாகும். இவ்விஷயத்தில் இதை நடத்துகின்றவர்கள் கண்ணும் கருத்துமாயிருக்க வேண்டும். வாரத்தில் எத்தினத்தில் கூட்டினால் ஜனங்கள் அதிகமாகக் கூடுவார்களோ, அத்தினத்தில் கூட்டவேண்டும். கூடுமானால் ஆரம்பத்தில் சில காலம் பொது ஜனங்கள் தாங்களாகக் கூடுமிடத்திற்குச் சென்று இவ்வேலையை நடத்தினால் நன்மை பயக்கும். விடுமுறை நாட்களில் சாத்தியமில்லையானால், அப்பொழுது நிறுத்திக்கொள்ளலாம்.

கூட்டம் கூடுவதற்கான வழி.—பொது ஜனங்களின் மனதைக் கவரத் தக்க ஆடல் பாடல்களை யமைத்து உருக்கமான யுத்த சம்பாஷணைகளுடனிணைத்து மாணவர்களைப் பயிற்று வித்து, கூட்டங்கள் தோறும் கூட்டங்களின் மத்தியில் நடிக்கச் செய்ய வேண்டும். இவ்விஷயத்தில் ஆசிரியர்கள் கற்பனை நிறைந்தவர்களா யிருக்க வேண்டும். பழைய பல்லவிகளைப் பாடாமல் ஒவ்வொரு கூட்டத்திற்கும் புதிது புதிதான யுத்த சம்பந்தமான சம்பாஷணைகளும், பாடல்களுமிருக்க வேண்டும். முதன் முதலாக அவைகளைப் பார்ப்பதற்கேனும் பெற்றோர்கள் தங்கள், தங்களுடைய இஷ்ட மித்திர பந்து ஜனங்கள் சகிதம் கூடுவார்கள். மற்றைய கதைகளைப் போல் யுத்த விஷயங்கள் ரஸிக்காதே என்று நினைக்கலாம். அது தவறான அபிப்பிராயமாகும். எந்த விஷயமா யிருந்தாலும் அதனதனுடைய வசனம், பாட்டு, முதலியவைகளுடைய, உருக்கம், கவர்ச்சித் தன்மை, முதலியவைகளைப் பொறுத்து ரஸிகமாய்த் தானிருக்கும். இன்னும் ஸ்தலங்களிலுள்ள சங்கித வித்வான்களை பரிச்சயம் செய்து கொண்டு அவர்களைக் கொண்டு கூட்டங்களில் பாடும்படி செய்து நடவடிக் கைகள் ஒவ்வொன்றும் முன்னதாகவே பொது ஜனங்களுக்கு அறிவித்து, கூட்டம் கூடிய பின் நல்லமுறையில் பிரசாரம் செய்யலாம். அடிக்கடி ஊர்வலங்கள் நடத்தி ஜனங்களின் மனதைக் கவரலாம். ஸ்தலத்திற்கு எவ்விதக் கலைத் தேர்ச்சியுள்ளவர்களும் தற்செயலாய் வர நேர்ந்தால் அந்நேரங்களில் அவசரக் கூட்டங்கள் போடலாம். முற் கூறிய காரியங்களெல்லாம் யாதொரு செலவின்றி சாமர்த்தியத்தினால் ஏற்பாடு செய்வதே நல்ல முறையாகும். அதுவே நீடித்து நிற்கும்.

நிர்வாகத் திறமை.—எந்தெந்தப் பிரதேசங்களில் பொது ஜனங்களின் கல்வித் தேர்ச்சி எம்மட்டிலிருக்கிறதோ அதற்குத் தக்கபடி கூட்டங்கள் நடத்துவதே பலன் தரும் முறையாகும். உதாரணமாக கல்வியில் முன்னேற்றமும் நாகரிகமு மடைந்த நகரங்களை யெடுத்துக் கொள்வோம். இவ்விடங்களில் தினசரிப் பத்திரிகை பார்க்கின்றவர்களாயிருப்பார்கள். இங்கு யுத்த சஞ்சிகை வாசிப்பதுடன் சிறந்த அறிவாளிகளைக் கொண்டு யுத்த சம்மந்தமான சொற்பொழிவுகள் நடத்துவிக்க வேண்டும். இந்த யுத்தம் சீக்கிரம் ஒழிந்தாலொழிய ஒருவரும் க்ஷேமமாயிருக்க முடியாதென்பது எல்லோரும் ஒப்புக்கொள்கிற விஷயமாகையால், எல்லோரும் இவ்விஷயத்திலீடுபடுவார்களென்று நிச்சயமாய் நம்பலாம். இதை நடத்துகின்றவர்கள் தூண்டுகோல்களாய்த் தான் இருக்க வேண்டியதிருக்கும். ஒருவரும் அதைரியமடைய வேண்டியதில்லை. குறித்த நிகழ்ச்சிகள் மட்டும் தவறாது நடத்திவைக்க வேண்டும். இதில் கடுகளவேனும் தவறுதல் கூடாது. ஒரு கூட்டத்தில் பொது ஜனங்கள் ஏமாற்றப்பட்டால் மறு கூட்டங்களுக்கு வரமாட்டார்கள். ஆகையால் வெகு ஜாக்கிரதையுடனிருக்க வேண்டும். பொது ஜனங்களிடம் விநயமாகவும், சாதுர்யமாகவும், சந்தர்ப்பத்திற் கேற்றவாறும் நடந்து கொள்ள வேண்டும். இவ்வாறு நடத்தி வந்தால், சிறந்த முறையில் வாசக வட்டாரங்கள் நடந்தே தான் தீருமென்பதில் ஐயமில்லை.

ஊக்கமும் உற்சாகமும்.—இந்த ஸ்தாபனங்களை நடத்துகின்றவர்கள் உண்மையுடனும், ஊக்கமுடனும் நடத்துதல் வேண்டும். வாரமொரு முறை நடத்த வேண்டுமே யென்ற மனச்சலிப்பு அடைதல் கூடாது. எந்தக் காரியத்திலும் சிரமமிருப்பது இயற்கையே. ஆரம்பத்தில் சிரமத்தை எதிர் பாராது நடத்திவிட்டாஸ், பின்பு அதுவே பழக்கமாகித் தானகவே நடந்து வரும். இதில் அலாதியான உற்சாகங் கொள்ள வேண்டும். வழக்கத்தில் வந்து விட்டால் மனச்சலிப்பு ஏற்படாது. நல்ல காரியத்திற்கு விக்கினங்கள் ஏற்படுமென்று பெரியோர் கூறுவர். எந்தக் காரியத்திலும் வாளாயிருந்தால், சோம்பேறியென்றும் திறமையற்றவனென்றும், அதே காரியத்தை விடா ஊக்கத்துடன் நடத்தியதின் பேரில் அக்காரியம் சிறப்புற்றதானால், பொறாமையின் வயப்பட்டு காரணமின்றியே யதற்குக் குந்தகம் பேசுவார்கள். இது உலகியல்பு. இவ்விதமானவை எதையும் லக்ஷியம் செய்யாது எடுத்துக் கொண்ட லக்ஷியத்தை நிறைவேற்றுவதிலேயே ஊக்கத்துடனிருத்தலே காரிய சாதகமாகும்.

இடைவிடாப் பிரசாரம்.—"எறும்பூரக் கல்லும் தேயும்" என்றபடி இடைவிடாப் பிரசாரத்தினால் பொது ஜனங்களுடைய மனதை முற்றிலும் நிச்சயமாய் யுத்த விஷயத்தில் திருப்பிவிடலாம். மனிதனுடைய மனமானது நிலையில்லாது சலனமுடையது. எல்லா விஷயமும் பிரசாரத்தின் போக்கைத் தான் பொறுத்திருக்கிறது. ஆரம்ப ஆசிரியர்களுக்கு இந்த முக்கிய சந்தர்ப்பத்தை அரசாங்கத்தார் அளித்ததற்காக ஆசிரியர்கள் கடமைப் பட்டிருக்கின்றார்கள்.

குறிப்பு.—ஆகையினால் ஆரம்பாசிரியர்கள் இன்னும் திறமையுடன் வாசக வட்டாரங்களை நடத்தி வருவார்களேயானால், யுத்தம் முடிந்த பின்பு அவர்கள் அரசாங்கத்தின் நன் மதிப்புக்கு உரியவர்களாகி ஆண்டவனருளையும் பெறுவார்களென்பது திண்ணம்.

மத்திய ஐரோப்பாவில் எதிர்ப்புத் தீ

(ஒரு அமெரிக்கர் எழுதியது.)

"ஐரோப்பிய கற்கோட்டை"க்குள் நமது படைகள் நுழைந்து போகும் போது, போர் வீரர்களையும் போர்த் தந்திரிகளையும் சோதிக்கக் கூடிய நிலைமை ஏற்படக் கூடும் எனத் தக்க அறிகுறிகள் இத்தாலியிலிருந்து வரும் செய்திகளிலிருந்து காணப்படுகின்றன.

முற்காலத்தால் ஒரு நாடு போரில் சரணடைந்தால், போர் நின்று விடும். எதிரிகள் தம் ஆயுதங்களைக் கீழே வைத்து விடுவார்கள். படைத் தலைவர்களும் அரசியல் நிபுணர்களும் சமாதான நிபந்தனைகளை வகுப்பார்கள். இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றும் பொருட்டு ஒரு சிலர் மட்டும் அங்கிருப்பார்கள். மற்றவர்களை வரவேற்க, அவர்களுடைய மனைவி மக்களும் உறவினரும் ஆவலோடு காத்திருப்பார்கள்.

இயற்கையாகவே இத்தாலி சரணடைந்தது என்று கேள்விப்பட்ட வுடனே, முதலில் அமெரிக்கர்கள் அப்படித் தான் நினைத்திருப்பார்கள். ஆனால், அவர்கள் நினைத்தது போல, அவ்வளவு இலகுவாக அது நடக்கவில்லை. ஐரோப்பாப் படத்திலிருந்து அவ்வளவு சுலபமாக இத்தாலியை வெட்டி எடுத்துவிடக் கூடவில்லை. நாங்கள் 'வென்ற' நாட்டிற்குள் நாங்கள் புக ஆரம்பித்த போது, கடுமையான எதிர்ப்பை நாங்கள் சமாளிக்க வேண்டியிருந்தது. ப்ரென்னர் கணவாய்க்கு நாங்கள் போக ஒட்டாதபடி ஜெர்மன் படைகள் தடுத்துக் கொண்டிருந்தன. முசோலினி தப்பியோடிப் போய் வட இத்தாலியில் தன் பாஸிஸ்ட் படைகளைத் திருத்திய மைத்துக் கொண்டிருந்தார்.

இத்தாலிய மக்கள் மனக் கலக்கம்

இத்தாலிய மக்களோ பெரிதும் மனக் கலக்கமடைந்திருந்தார்கள். இதற்குக் காரணம் அங்கு நிகழ்ந்த சம்பவங்கள் தான். தம்மைத் தாக்கும் நேசநாட்டினருக்கு வெளிப்படையாக ஆதரவளிப்பதா? அல்லது என்ன நடக்கிறதென்று காத்திருந்து பார்ப்பதா? என்று அவர்களுக்கு விளங்க வில்லை. சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட்டவரைப் பற்றி நாட்டில் மாறுபட்ட கருத்து இருந்து வந்தது. ஆகவே, இந்தச் சமயத்தில் முசோலினி தப்பியோடிவிட்டார். இச் செய்தி, நிலைமையை மேலும் சிக்கலாக்கிவிட்டது. இதற்கிடையில், எதிர்ப்புக் கட்சியினரும், பொலக்னு, ட்யூரின், ஜினேவா, மிலான் ஆகிய இடங்களில் தலைமறைவாக வேலை செய்துகொண்டிருந்தவர்கள் முன்வந்து, அரசாங்கத்தை கவிழ்க்க வேண்டும் என்று தாம் கொண்டிருந்த கருத்தைத் தெரிவித்தார்கள்.

வேர்செய்ல்ஸ் ஒப்பந்தம் நிறைவேறிய பிறகு, ஐரோப்பாக் கண்டத்திலே, உண்மையிலேயே படை எடுத்துத் தாக்கும் படைகள் எவை என்றும், அவற்றை எதிர்த்துத் தாக்கும் படைகள் எவை என்றும் தெளிவாக உணர்ந்து கொள்ளும் சந்தர்ப்பம் இப்போது தான் ஏற்பட்டது. அந்தக் காலம் முதல் இதுவரை அதே யிடத்தில் வசித்து வந்தவர்களுக்கு மட்டுந் தான் கோப மூட்டத் தக்க சம்பவங்கள் எத்தனை நடைபெற்றன வென்றும், அங்கே அக்கோபத்தை எப்படி அதிகப்படுத்தினர்கள் என்றும் விளங்கும். இப்படிப்பட்ட படைகளை நிர்வகிப்பதற்கு பீரங்கிகளும் அரசியல் நிபுணத்துவமும் அதிகமாக வேண்டியிருக்கிறது. இதற்கு, உயரிய ஒழுக்கமும் மிகவும் அவசியம்.

பால்கன் நாட்டு மந்திரியின் அனுபவம்

சமீபத்தில் ஒரு பால்கன் நாட்டின் அந்நிய நாட்டுக் காரியாலயத்தைச் சேர்ந்த ஒரு பெரிய உத்தியோகஸ்தருடன் நான் பேசிக் கொண்டிருக்கும் போது, இதே விஷயத்தைக் குறித்துத் தான் அவரும் வற்புறுத்தினர். ஐரோப்பாக் கண்டத்திலேயே மகாசிக்கலான நிலைமையில் அந்நாடு இருக்கின்றது. கோபம் தலைக்கேறி வெறுப்பு தாண்டவமாடியது. அந்நாட்டின் தலை நகரத்தை நாஜிகள் தாக்குவதற்குச் சில மணி நேரத்திற்கு முன்பு தான் அவர் தனது மனைவியையும் குழந்தையையும் தன் நாட்டு எல்லையைவிட்டு அப்புறப்படுத்தினர்.

இவர், ஒரு நந்தவனத்திலுள்ள மரங்களுக்கிடையே யிருக்கும் புல் தரையில் படுத்துக் கொண்டு நாஜிகளின் குண்டுகள் விழுவதைக் கவனித்துக் கொண்டிருந்தார். அவர் இருந்த இடம் அங்கே பாதுகாப்புள்ளது என்று சொல்ல வேண்டும்; ஏனென்றால், விமானப் பாதுகாப்பிடங்களில் ஒளிந்துகொள்ளாதவர்கள் மட்டும் 2 நாட்களில் 24,000 பேர்கள் மாண்டு போனர்கள். சில நாட்களுக்குப் பிறகு அவர் தானே அந்நாட்டினின்று விமானத்தில் வெளியேறிவிட வேண்டியதாயிற்று.

கெய்ரோவிலிருந்த தன் மனைவியையும் குழந்தையையும் அழைத்துக்கொண்டு எதிரிகளின் டார்ப்பிடோ குண்டுகள் நிறைந்துள்ள அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடந்து கடைசியாக நியூயார்க் நகரம் போய்ச் சேர்ந்தார்கள்.

தம் நாட்டில் நாஜிகளின் ஆதிக்கம் அழிந்தவுடனேயே, மீண்டும் தன் நாட்டிற்கு வந்து சேர வேண்டுமென்று அவர் பெரிதும் ஆவல் கொண்டிருக்கிறர். அச்சுக் கொடுங்கோன்மை மறைந்து தானகவே ஜனநாயக ஆட்சிமுறை அங்கே தழைக்கக் கூடுமென்று பல அமெரிக்கக்கள் நினைக்கக் கூடுமென்றும் பல அமெரிக்கர்களிடம் கூறியிருக்கிறர். இப்படி அவர் கூறியதற்கு ஒரு காரணமுண்டு. மத்திய ஐரோப்பாவிலுள்ளவர்கள் எவ்வளவு கடுமையான குண்டுகளுக்கு ஆளாக வேண்டியிருக்கிற தென்றும், இது வரை இருந்திருக்கிற தென்றும் அமெரிக்கர்கள் அறியார்கள். 'நாஜிசம்' 'கம்யூனிசம்' என்னும் எதிர்ப்புத் தீக்கு அந்நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் சிக்கி யிருக்கிறர்கள்.

எல்லாம் குழப்பமாய்த் தான் இருக்கும்

"எங்கள் தேசியக் கருத்துக்களோடும் லட்சியத்தோடும் அந்நிய நாட்டுக் கருத்துக்களும் இணைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே நாட்டுப் பற்று மிகவுமுடையவர்களுங் கூட, உண்மையான விஷயங்களை உணர்ந்து கொள்ள முடியாமலிருக்கிறது. இந்த நாஜிசமோ கம்யூனிசமோ நமக்கு வேண்டாமென்று கூறி, மக்களுக்குத் தலைமை வகித்து நடத்தக் கூடியவர்கள் போதுமான பயிற்சி யில்லாதவர்களாயிருக்கிறர்கள். ஏனென்றல் தன் சொந்த உயர்விலேயே அவர்களுடைய எண்ணமெல்லாம் பற்றி நிற்கிறது. ஒழுக்க சம்பந்தமான பிரச்சினைகள் குழப்பத்திற்குள்ளாக நேர்ந்தால், மக்களுடைய ஆராய்ச்சியும் குழம்பிக் கொண்டுதான் இருக்கும். இப்படி உண்டாகும் பொது குழப்பத்தில், நன்றக உணர்ந்து வெல்லத் தக்கவர்கள், ஒழுக்கத்திலும் தெய்வீகத் தன்மையிலும் உயரிய நிலையை யடைந்தவர்கள் மட்டுந் தான்". இப்போது ஐரோப்பிய நாடுகளுக்கே மூன்று வகைப் புகல்கள் தான் இருக்கின்றன :—(1) பொதுவுடைமை தத்துவம். (2) பாசிஸம். (3) ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டு படைகளைத் திருத்தி யமைத்தல்.

* * * *

ஒழுக்கத்தைக் குழப்பிக் கொண்டிருக்கும் இந்தப் பிரச்சினைகள் ஐரோப்பாக் கண்டத்தில் மட்டுந் தான் இருக்கின்ற தென்று சொல்லுவதற்கில்லை. பால்கன் தேச பக்தர்களான அரசியல் வாதிகள் மட்டுந் தான் இது பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கிறர்கள் என்பது மில்லை. சமீபத்திலுங் கூட ஒற்றுமையின் அவசியத்தை வற்புறுத்தி சீன ஜெனரலாசிமோ சொல்ல வேண்டிய அவசியம் நேர்ந்திருப்பதாக நினைத்தார்.

சமீபத்தில் ஸ்ரீமதி ஷியாங்கெய் ஷேக் என் நண்பர் ஒருவரிடம் பேசிக் கொண்டிருக்கும் போது, ஒரு நாடு சரியானபடி அமைய வேண்டுமானல், ஒழுக்கமுடையவர்கள் அங்கிருக்க வேண்டியது மிகவும் அவசியம் என்றும், சீன மந்திரி சபை அமைக்கப்படும் போது, ஒழுக்கக் குறைவுக்கு இடம் ஒரு சிறிதும் இல்லாதவர்களாகவே பொறுக்கி எடுத்து நியமிக்க வேண்டு மென்றும் குறிப்பிட்டார்.

(11-ம் பக்கம் தொடர்ச்சி)

கிடந்தனர். அவர்கள் நம்மவர்களைத் திடீரெனத் தாக்கி விட்டனர். அவர்களிடம் சிக்கியவர்கள் ஏழு கூர்க்கர்கள். அவர்களிடமும் துப்பாக்கிகளிருந்தன. எடுத்த எடுப்பிலே ஏற்பட்ட திகைப்புத் தீர்ந்ததும், அவர்கள் ஏழுவரும் டதிலுக்குக் குறி தவருது சுட்டிருக்கிறர்கள். ஆயினும் அவர்களை ஜப்பானியர் தொடர்ந்தே வந்திருக்கிறர்கள்.

அவர்களுக்கு அந்த காட்டுப் பிரதேசத்திலே கோபால் என்ற சிறுவன் வழி காட்டி யிருக்கிறன். காட்டு நடுவிலே ஒரு இடத்திலே பல ஆயிர ரூபாய்கள் அடங்கிய பணப் பெட்டி ஒன்றை, அவசரத்திலே நேசப் படைகள் காட்டு நடுவிலே விட்டு விட்டு, ஓடிப் போய் விட்டன. அதை மீட்பதற்காகவே மேற்கண்ட வீரர்கள் புறப்பட்டனராம். வெகு தைரியமாக அவர்கள் அந்தப் பொக்கிஷப் பெட்டி இருக்குமிடத்தை அடைந்து விட்டார்களாம். அதை ஒருவர் மாற்றி ஒருவராக ஏழு நாட்கள் முதுகில் சுமந்து நடந்தார்களாம். காட்டுப்பாதை என்பதை கவனத்தில் வைத்துக் கொள்ளுங்கள். ஏழு நாட்களில் அவர்களது துப்பாக்கிகளுக்கு ஐந்து ஜப்பானியர் பலியானர்களாம். இந்த கூர்க்க வீரர்களை, யார் தான் பாராட்டமாட்டார்கள்!

இந்தியப் படைகளில் 10 லட்சம் பேர்கள்

இப்பொழுது இந்திய சைனியத்தில் பத்து லக்ஷம் பேர்களுக்கும் மேற்பட்டவர்கள் தாமாகவே வந்து சேர்ந்து, நல்ல பயிற்சியும் பெற்றிருக்கிறர்கள். சீமையில் உள்ள ராயல் விமானப் படையிலும், அங்கிருந்து இந்நாட்டிற்கு வந்துள்ள படையிலும் இந்திய வாலிபர்கள் பலரிருக்கிறர்கள். ஜெர்மனியின் தலைநகர் மீது இந்திய வாலபன் ஒரு டஜன் தடவை பறந்து சென்று, நிறைய குண்டுகளை வீசி விட்டுத் திரும்பி யிருக்கிறன். அவன் பாரத நாட்டிற்கும் வந்திருக்கிறனும்.

பர்மா மீது பறந்து செல்லும் விமானிகளில் பலர் இந்தியர்கள் தான். இது உலக மகா யுத்தம்; உலக சமாதானத்திற்காக நடக்கும் யுத்தம்; இதிலே நம்மாலான சேவைகளைச் செய்ய வேண்டியது நமது கடமை; அதுவும் நமது நாட்டெல்லையில், ஈவிரக்க மற்ற, தர்மாதர்மம் பார்க்காத கொடிய குள்ள ஜப்பானிய விரோதி வந்திருந்து, சமயம் பார்த்துக் நம்மை அமுக்கப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது, நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது என்பதை உணர்ந்து, அவர்கள் அபாரமான உத்சாகத்துடன் யுத்தம் செய்கிறர்கள். இது நமது எதிரிகளுக்குக் கசப்பான செய்தி தான். ஆனலும் இதை விடக் கசப்பான செய்திகளை அவர்கள் இனி கேட்கச் சித்தமாக இருக்க வேண்டும். பர்மியப் போர் ஒரு நாள் இதுவரை இல்லாத உக்ரத்தை அடையத் தான் போகிறது. அதற்கு வேண்டிய கப்பல்களும், வேறு பல சாதனங்களும் வந்து சேர வேண்டியதுதான் தாமதம், இங்கே தோல்வி; அங்கே ஜப்பானியர் பிணக் குவியல் மாயுமலை உயரம் உயர்ந்தது; இங்கே ஜப்பானியர் ஓட்டம்; அங்கே எண்ணெய் வயல்களை இழந்தனர் என்ற செய்தி தான் கிளம்பும். இந்தச் செய்திகள் செவிக்கு ருசிக்குமா என்ன?

யுத்த நாட் குறிப்புக்கள்

பிரிட்டனும் ஜெர்மனியும்.

பிப்ரவரி 25.—லண்டனில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நேச நாடுகளின் அரசாங்கங்களின் நிபுணர்களைக் கொண்ட கமிட்டி, சமாதானம் ஏற்பட நேருமானுல், ஜெர்மனியின் இராணுவப் பொருளாதாரக் கட்டுப்பாடுகள் பற்றிய திட்டத்தை எப்படி வகுத்து, நிபந்தனைகளோடு சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பது பற்றி, வேலை செய்து கொண்டிருக்கிறது.

பிப்ரவரி 27.—சென்ற வாரம் ஜெர்மனிக்கு மேலேயும், இங்கிலாந்துக்கு மேலேயும் நடைபெற்ற விமானத் தாக்குதல்களில் ஜெர்மன் விமானங்கள் 700 நாசமாயின.

பிப்ரவரி 28.—ஆயிரக் கணக்கான அமெரிக்கர்களின் படைகள் இங்கிலாந்துக்கு வந்து சேர்ந்திருக்கின்றன.

பிப்ரவரி 29.—"ஸ்பார்டன்" என்னும் பிரிட்டிஷ் க்ரூய்சர் கப்பல் காணுமற் போய் விட்டது.

அமெரிக்காவும் அட்லாண்டிக்கும்.

பிப்ரவரி 24.—வர்ஜினியாவைச் சேர்ந்த போர்ட்ஸ் மௌத்தில், '**ஷங்ரி-லா**' என்னும் விமானந் தாங்கிக் கப்பல் வெள்ளோட்டம் பார்க்கப்பட்டது.

இந்தியா, பர்மா, இலங்கை.

பிப்ரவரி 23.—அரக்கான் போர் முனையில், நேச நாட்டுப் படைகள் தாக்கிப் போராடுகின்றன வென்றும், தாம் தாக்கிப் போராடும் நிலைமையை ஜப்பானியர்கள் இழந்து விட்டார்களென்றும் தென் கிழக்காசியப் படைத் தலைவர் அறிக்கை கூறுகிறது.

பிப்ரவரி 25.—பாலி ரோட்டில் தாக்கிய ஜப்பானியப் படைகளில் மிஞ்சி யிருந்தவர்கள் மாயூ மலையின் முக்கியமான சிகரத்தினின்று விரட்டி யடிக்கப்பட்டார்கள்.

கயக்டாவை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

பிப்ரவரி 26.—நாக்கியேடாக் கணவாயின் கிழக்குக் கோடிக்கருகிலுள்ள 315-ம் பாய்ண்ட் என்னும் முக்கியமான தோர் மலைச் சிகரத்தை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

பிப்ரவரி 28.—அரக்கானிலுள்ள நேச நாட்டுப் படைகளைத் தாக்கி வென்று இந்தியா முழுவதிலுமே ஒரு வீச்சு வீசலாமென்று எண்ணித் தாக்கிய ஜப்பானியப் பெரும் படை யொன்று, படுதோல்வி யடைந்தது.

பிப்ரவரி 29.—பர்மாவிலுள்ள பிரிங்கா, ஹ்கான், காடாஞ், செனும்கா முதலிய கிராமங்களை சீனப் படைகள் கைப்பற்றிக் கொண்டன. மாயூ மலைத் தொடருக்குக் கிழக்கே எல்லாவற்றையும் நாசமாக்கும் வேலை மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ரஷ்யாவும் பின்லாந்தும்.

பிப்ரவரி 23.—ஸ்கோப் பகுதியைச் சேர்ந்த இரண்டு முக்கியமான இடங்களில் ஸ்ட்கிக்ரஸனியே ஒன்று. இதை ரஷ்யர்கள் கைப்பற்றிக் கொண்டதோடு, மற்றொரு முக்கியமான இடமான ட்னோவின் வெளிப் பக்கங்களிலும் நுழைந்து விட்டார்கள்.

பிப்ரவரி 24.—ட்னோவையும் ரகசேபையும் ரஷ்யப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

பிப்ரவரி 25.—விடெப்ஸ்கை ஜெர்மானியர் காலி செய்து விட்டனர். மைல்நிட்சியை ரஷ்யர்கள் கைப்பற்றினர்.

பிப்ரவரி 26.—பார்க்கோபை ரஷ்யப் படைகள் கைப்பற்றின. வெள்ளை ரஷ்யத் தலை நகரான மின்ஸ்கை நோக்கி ரஷ்யப் படைகள் முன்னேற ஆரம்பித்து விட்டன.

ரஷ்ய பின்லந்து சமாதான நிபந்தனைகள் உத்தியோக முறையிலில்லாமல் வெளியிடப்பட்டது.

பிப்ரவரி 27.—நூறு மைல் தூரத்திற்கு சோவியத் படைகள் திரண்டு மூன்று பகுதிகளாகப் பிரிந்து, எஸ்டோனியா, லட்வியா, லிதுவேனியா ஆகியவற்றை நோக்கிப் போகின்றன.

பிப்ரவரி 28.—கரமிஷேயோ, ஸ்லாப் கோவிச்சி, போஷிரிவிச்சி, முதலிய 450 இடங்களை ஸ்கோப் பகுதியில் சோவியத் படைகள் கைப்பற்றி ஸ்கோபை நெருங்குகின்றன. நோவோ சொகோலினிகிக்கு மேற்கிலும் வடமேற்கிலும் ஸ்லொபோடாவையும் மேலும் 20 இடங்களையும் ரஷ்யப் படைகள் கைப்பற்றிக் கொண்டு விட்டன.

பிப்ரவரி 29.—பொகொரெல்கா, நோவோ ரிஜேவ் இவ்விரண்டையும் சோவியத் படைகள் கைப்பற்றின.

ஜெர்மானியரின் தோல்வி நெருங்கி விட்டதென்று மார்ஷல் ஸ்டாலின் பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட்டுக்கு ஒரு செய்தி யனுப்பி யிருக்கிருர்.

ரஷ்யாவோடு ஒப்பந்தம் செய்து கொள்ளுவதற்கான நிபந்தனைகளைக் குறித்துக் கலந்து பேசும் பொருட்டு பின்லந்து பார்லிமெண்டின் இரகசியக் கூட்டமொன்று இன்று நடந்தது.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்திய தரைக் கடல் பகுதி.

பிப்ரவரி 26.—இரண்டு போர் முனைகளிலும் மூன்ருவது முறையாகக் கடும் போருக்கு மும்முரமான ஆயத்தங்கள் நடைபெறுகின்றன.

பிப்ரவரி 27.—காசிநோவுக்குத் தென் மேற்கே, அன்சியோ கடற்கரையை யடுத்துள்ள நேச நாடுகளின் அணிவகுப்பில் புக ஜெர்மன் படைகள் முயற்சித்தன.

விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரி வயப்பட்ட நாடுகள்.

பிப்ரவரி 24.—போலிஷ் ரஷ்ய எல்லைப் பிரச்சினை பற்றி மிஸ்டர் சர்ச்சில் கூறியது பற்றி, போலந்து அரசாங்கம் என்ன கருதுகிறது என்று போலந்து அந்நிய நாட்டு மந்திரி, பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரி மிஸ்டர் ஈடனிடம் தெரிவித்தார்.

பிப்ரவரி 28.—வட யூகோஸ்லாவியாவில் 'பார்டிசன்' கட்சியை எதிர்த்து ஜெர்மன் படைகள் மீண்டும் தாக்கின.

பிப்ரவரி 29.—வட பிரான்சில் பாஸ் டி கலாய் பகுதியில் 8-வது விமானப் படையின் மீட்சியாளர்கள் ஜெர்மன் இராணுவ ஸ்தலங்களைத் தாக்கினர்.

நடு நிலைமை நாடுகள்.

பிப்ரவரி 24.—ரஷ்ய விமானங்கள் ஸ்டாக்ஹாம் மீது வெடி குண்டுகளை எறிந்ததாக ஸ்வீடன் அரசாங்கம் குறை கூறியதை ரஷ்ய அரசாங்கம் மறுக்கிறது.

ரோமாபுரியைத் தாக்கித் தகர்க்க வேண்டாமென்று போராடும் அரசாங்கங்களை போப் வேண்டிக் கொள்ளுகிருர்.

தூரக் கிழக்கு நாடுகள்.

பிப்ரவரி 23.—மரியானு தீவுகளைச் சேர்ந்த செய்பான், தினியன் ஆகிய இரண்டு தீவுகளையும் அமெரிக்க விமானங்கள் தாக்கின.

நேற்று பாரி தீவைக் கைப்பற்றியதோடு, எனி டாக் அடோல் முழுதும் கைப்பற்றப்பட்டு விட்டது.

ரபால், ஹன்சா விரிகுடா முதலியவற்றை நேச நாட்டு வெடி குண்டு விமானங்கள் தாக்கின.

பிப்ரவரி 24.—கேவினிங், டியூக் ஆப் யார்க் தீவுகள், ரபால் ஆகியவற்றை நேச நாட்டு விமானங்கள் தாக்கின.

ஒரு ஜப்பானிய யுத்தக் கப்பலும் இரண்டு வியாபாரக் கப்பல்களும் பிஸ்மார்க் தீவுகளிலிருந்து தப்பி யோடிக் கொண்டிருக்கும் போது, மூழ்கடிக்கப்பட்டன.

பிப்ரவரி 25.—ஜப்பானியக் கப்பற் படையின் போக்கு வரவுகளை குறித்து அமெரிக்கக் கப்பற் படை மந்திரி கர்னல் நாக்ஸ் ஒரு அறிக்கை விடுத்தார்.

பிப்ரவரி 26.—பசிபிக் சமுத்திரத்தில் போராடும் படைகளை பாராட்டி ஜெனரல் மக்கார்தர் ஒரு பிரசங்கம் செய்தார்.

ஜப்பானியர் வசம் சீனுவிலுள்ள கியுகியாங், ஹாங்கோ இவ்விரண்டையும் நேச நாட்டு விமானங்கள் தாக்கியதாக ஜெனரல் ஸ்டில்வெல் விடுத்த அறிக்கை கூறுகிறது.

பிப்ரவரி 29.—பசிபிக் மகா சமுத்திரத்திலும் தூர கிழக்கிலும் 14 ஜப்பானிய சப்ளை கப்பல்களை அமெரிக்க நீர் மூழ்கிக் கப்பல்கள் மூழ்கடித்ததாயும், பிப்ரவரி 21 முதல் 28 வரை 189 ஜப்பானியக் கப்பல்கள் நஷ்டமாயின வென்றும் கர்னல் எப். நாக்ஸ் தெரிவித்தார்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.